No.

ஸ்ரீ:

லோகமித்ரன்.

ஓர் மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

"அன்புநாணொப்புரவு கண்ணோட்டம் வாய்மையோ
டைந்துசால் பூன்றிய தூண்."——திருக்குறள்.

வா. 2. ஆநந்த வரு வைகாசி மீ ந. 2.

உள்ளுறை.

நமது குறிப்புகள்	57
தமிழும் ஸம்ஸ்க்ருதக்கலப்பும் ...	65
ஜாதி வித்தியாசத்தைப்பற்றி ஓர் அபிப்பிராயம்	70
இந்திய ஸ்திரீகள் (ஓர் பிரதிவாதம்)...	78
உபதேசங்கள்	83
பதினைந்து வினாக்கள்	84
ஓர்நகரிரவு (Goldsmith's city-night piece)	85
லலிதாம்பாள் (ஓர் நாவல்)	88
தமிழர் கூட்டம்	94
ஸ்நேஹலதையின் பிராணப்பரித்யாகம்	102
ஸ்ரீகம்பராமாயணம் (முகவுரைதொடர்ச்சி)	107

பத்திராதிபர், M. V. கோவிந்தராஜய்யங்கார்.

நாமக்கல்.

யூனியன் அச்சியந்திரசாலை.

வருஷம் 1-க்கு ரூ. 3.] 1914. [தபாற்கூலி அணா 4.

...னிப்பிரதி ஒன்றுக்கு அணா 6.

OFFIC... 1914 MADRAS
15-3-17

ஸ்ரீ

லோகமித்ரன்.

இப்பெயர்கொண்ட மாதாந்தத் தமிழ்ப்பத்திரிகை ஒன்று 1913-ம் வருஷம்முதல் வெளியாகிறது. இதனுள் லௌகிக வைதிக விஷயங்கள், புராதன நவீனசாஸ்திரவிஷயங்கள், ராஜீய தேசீயவிஷயங்கள், இலக்கண இலக்கிய ஆராய்ச்சிகள் இவைகள் போன்ற இன்னும் அநேகவிஷயங்கள் தகுந்தபண்டிதர்களால் எழுதப்பட்டு வருகின்றன.

56 பக்கங்கள் உடையதாக உயர்ந்த கடிதத்தில் பதிப்பிக்கப்படும்.

வருஷச்சந்தா தபால் கூலியுள்பட ரூ. 3—4—0.

விளம்பர விகிதம்.

பக்கம் ஒன்றுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. **1—8—0**

குறைந்தபக்கங்கட்கு கேட்டுத் தெரிந்துகொள்ள வேண்டுகிறோம்.

லோகமித்ரன் ஆபீஸ்
நாமக்கல்.

M. V. கோவிந்தராஜய்யங்கார்,
எடிடர்.

பத்திரிகைக்கு முன்பணம் கொடுத்து உதவியவர்கள்.

பிரம்மஸ்ரீ K. சுப்பிரமணியசாஸ்திரிகள் அவர்கள், நாமக்கல். ரூ 35.

மகா-ள-ள-ஸ்ரீ மகமது ஹனீப்சாஹிப் அவர்கள், நாமக்கல். ரூ 25.

ஸ்ரீலஸ்ரீ திருவாவடுதுறைமடம் பண்டாரஸந்நிதியவர்கள், திருவிடமருதூர். ரூ 30.

ஸ்ரீமான் கோபாலசாமி ரெகுநாத ராஜாளியார் அவர்கள், ஹரித்வாரமங்கலம். ரூ 25

11 APR 1914 MADRAS

ஸ்ரீ:

லோகமித்திரன்.

வா. 2. ஆநந்த ஹு வைகாசி மீ கஉ. ந. 2

நமது குறிப்புகள்.

இச்சஞ்சிகையிலுள்ள 'தமிழ்ச் சங்கம்' என்னும் வியாசத்தைத் தமிழபிமானிகள் கவனித்து, தமிழ் நாட்டின் விருத்தியைக் கோரும் ஒவ்வொருவரும் அங்ஙனே அதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்வார்களென்று வேண்டிக்கொள்ளுகிறோம்.

* * * * *

சுதேசமித்திரன் முதலிய பத்திரிகைகளில் அடிக்கடி தேவஸ்தானக்கேஸுகள் வெளியாவதினின்றும், நமது சென்னை இராஜதானியிலுள்ள அநேக தேவஸ்தானங்களின் கணக்குகள் சீர்குலைந்து கிடக்கின்றனவென்றும் சிற்சிலவிடங்களில் தேவஸ்தானத்தின் பணத்தை துர்வினியோகப்படுத்துவதாயும் தெரியக்கிடக்கின்றது. ஆகலால் பொது ஜனங்கள் இது விஷயத்தில் கவலை யெடுத்துக் கொண்டு 'ட்ரஸ்டி'களை ஊக்கிவிட்டு கணக்குகளை அப்போதைக்கப்போது தணிக்கை செய்யவேண்டுவது கடமையாகும். ஏனெனில் இப்படி செட்டில்லாச்செலவு செய்வதால் அநேக தேவஸ்தானங்கள் முன்னிருந்த மானிய நிலங்களையும் மூலதனத்தையும் இழந்து வெகு கேவலஸ்திதியிலிருப்பதை நாம் பார்க்கிறோம்.

* * * * *

கண்ணம்பாடியில் காவிரி நதியை மைசூர் கவர்ன்மெண்டார் தேக்கிக்கொள்ளும் விஷயமாய் நடந்த மத்தியஸ்தத்தில் மத்தியஸ்

தார் மைசூருக்கு அனுகூலமாகத் தீர்மானம் செய்திருக்கிறார்களாம்.
அதாவது மைசூர் ராஜாங்கத்தார் தண்ணீரைத் தேக்கிக்கொள்ள
லாம். அதனால் தஞ்சை, திருச்சி ஜில்லாக்களின் சாகுபடி குறையா
தென்று சொல்லிவிட்டார்களாம். இதைக்குறித்து 'ஹிந்து' பத்தி
ரிகையில் ஒரு நிருபக்காரர் இந்தத்தீர்மானத்தின்படி நடத்த விட்டு
விடுவார்களானால், தஞ்சை, திருச்சி ஜில்லாக்களிலுள்ள கரைவழி
நிலங்களெல்லாம் இனி பொட்டைநிலங்களாகத்தான் போகவேண்டு
மென்றும் தஞ்சையும் திருச்சியும் தென்னாட்டுத் தானியக் களஞ்சி
யங்கள் என்னும் பெயர் இனி நில்லாதென்றும் அப்படி நேரிடாத
படி ஜனங்களெல்லாம் ஒன்றுகூடி இந்திய கவர்ண்மெண்டை
வற்புறுத்தவேண்டுமென்றும் எழுதுகிறார்.

* * * * *

வட அமெரிக்காவில் பிரிட்டிஷ் கோலம்பியா என்னும் மாகா
ணத்தில், வெகு காலத்திற்கு முன்னிருந்து அநேக இந்தியர்கள்
குடியேறி அதிக ஊக்கத்தோடு பாடுபட்டு செட்டாயிருந்து அதிகம்
விருத்தி யடைந்திருக்கிறார்களென்று தெரியவருகிறது. இப்படி
இந்தியர்கள் நாளுக்குநாள் விருத்தியடைவது வெள்ளைக்காரத்
தொழிலாளிகளுக்குப் பொறுக்காமல் இனி இந்தியர்களை அங்கே
வரவொட்டாமல் தடுக்கவேண்டுமென்று அநேக ஏற்பாடுகள் செய்து
வருகிறார்கள். அங்கிருக்கும் இந்தியர்களெல்லாம் ஒன்றுகூடி
என் இந்தியர்கள் வரக்கூடாது? இந்தியரும் பிரிட்டிஷ் குடிகளா
யிருக்க அவர்களுக்கும் பிரிட்டிஷ் ராஜாங்கத்தில் எங்கேவேண்டு
மானாலும் குடியேறி வசிக்கச் சுதந்தரமுண்டு என்று வாதித்து வரு
வதுடன் இம்பீரியல் துரைத்தனத்தாருக்கு இதுவிஷயமாய் அறிக்
கை செய்துகொண்டிருக்கிறார்கள். என்ன பொறாமை! வெள்ளைக்
காரர்கள் மட்டும் எங்கே வேண்டுமானாலும் குடியேறலாம். ஆனால்
கருப்பு மனிதர்கள் அப்படிச்செய்வது தப்பிதமாம்.

* * * * *

நமது தாலூகாவிலிருந்து மாதம் ஒன்றுக்குக் குறைந்தபட்சம்
300 எழை ஜனங்கள் இலங்கைக்கென்றும், பினாங்குக்கென்றும்

ஒப்பந்த அடிமைகளாக மோசஞ்செய்து கொண்டுபோகப்படுகிறார்கள். கங்காணிகளும் கமிஷன்காரர்களும் செய்யும் வஞ்சனையால் ஆசைகொண்டு மயங்கி, அங்கேபோனால் தாங்கள் அநுபவிக்கப்போகிற கஷ்டங்களை அறியாதவர்களாய், கங்காணிகளினுடைய வலையில் அகப்பட்டு அவஸ்தைப்படுவதை நாம் கண்ணாரக் கண்டிருந்தும் அதற்கு வேண்டிய சிகிச்சை செய்ய முயலாதிருக்கிறோம். ஒவ்வொரு ஜில்லா "கமிஷன் ஆபீஸ்களிலிருந்து" தினந்தினம் ஏற்றுமதியாகும் இம்மனிதக் கால்நடைகளின் பரிதாபம் என்னென்பாம்! திருச்சினாப்பள்ளி 'ஜங்ஷன்' ரைல்வே ஸ்டேஷனண்டை தினம் மாலை $6\frac{1}{4}$ மணிக்குப் போய்ப்பார்த்தால் தினம் ஒன்றுக்குசுமார் 200, 300 திக்கற்ற மனிதர்கள் ஆடுமாடுகளை மந்தைகளுக்கு அடித்து ஓட்டுவதுபோல கமிஷன் சேவகர்களால் விரட்டப்பட்டு வெருண்டுபோவதை நித்தியமும் காணலாம்.

இப்படி தினந்தினம் நமது தேசங்களினின்றும் நன்றாய்ப் பாடுபடக்கூடிய கூலியாட்கள் கணக்கு மிதமின்றி வெளியேறுவதால் நமது நாட்டில் கூலியாட்கள் குறைவதோடு விவசாயம் முதலிய இன்றியமையாத தொழில்களுக்கு ஆள் கிடையாமல், தண்ணீர்ப்பஞ்சம் வந்ததுபோல் ஆட்பஞ்சமும் வந்துவிட்டது. இதனால் நம் நாடு நாளுக்குநாள் க்ஷீணமடைந்து நம்முடைய தொழிலாளிகளின் உழைப்பையெல்லாம் அந்நியர் அநுபவித்து நாம் நித்திய தரித்திரர்களாகவே இருக்க நேருகின்றது.

ஆகையினால் ஒவ்வொரு கிராமவாசியும் கங்காணிகளைத் தமது கிராமத்தில் கால்வைக்கவொட்டாமல் காத்து, எளிய ஜனங்களுக்கு அன்னிய தேசத்தில் உண்டாகும் கஷ்டங்களை எடுத்துச்சொல்லி அவர்களை போகவொட்டாமலும், கங்காணிகளின் மோசவலைக்குள் அகப்படாதிருக்கும்படிக்கும் எச்சரிக்கை செய்தால் கோடிபுண்ணியமுண்டு.

மிஸ்டர் காந்திக்கு நேர்ந்த துக்கம்.

மிஸ்டர் காந்தியின் சகோதரர் சமீபத்தில் இறந்துபோய்விட்டாரென்று சென்ற மார்ச்சு மாதம் 18-ந் தேதி பிரசுரமான 'இந்தியன் ஒபினியன்' என்ற பத்திரிகையிலிருந்து தெரியவருகிறது. அவருடைய சகோதரராகிய மிஸ்டர் லட்சுமிதாஸ் காந்தி பூரிபந்தர் சமஸ்தானத்தின் கஜான்ஜியாகவிருந்தார். மிஸ்டர் காந்தியின் தகப்பனாரும் பாட்டனாரும் பூரிபந்தர் சமஸ்தானத்தில் மந்திரி உத்தியோகத்திலிருந்தவர்கள் என்பதை நமது நேயர்கள் மறந்திருக்க மாட்டார்கள். மிஸ்டர் காந்திக்கு நேர்ந்த துக்கத்துக்காக வருத்தப்பட்டு அவருடைய பல நண்பர்களும் அவருக்கு எழுதியுள்ள கடிதங்களுக்குப் பதிலாக அடியிற் காணுமாறு மிஸ்டர் காந்தி 'இந்தியன் ஒபினியன்' பத்திரிகையில் எழுதியிருக்கிறார்:—

இந்தியாவிலிருந்த என்னுடைய சகோதரர் இறந்துபோய்விட்டதனால், எனக்கும் என் மனைவிக்கும் நேரிட்டுள்ள துக்கத்தின் பொருட்டு தங்களுடைய அனுதாபத்தைத்தெரிவித்து, தென் ஆபிரிக்காவிலுள்ள சங்கங்களும் பிறரும் எனக்கு அனுப்பியிருக்கிற தந்திகளைக் கணக்கிட முடியாது. அவைகள் ஒவ்வொன்றுக்கும் தனித்தனி பதில் எழுதுவதும் முடியாதகாரியம். டர்பன், ஜொஹானெஸ்பெர்க், மரிட்ஸ்பர்க் முதலிய இடங்களிலிருந்து அநேக தந்திகள் வந்திருக்கின்றன. எல்லாருக்கும் என்னுடைய வந்தனத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். நிற்க, என்னுடன் பிறந்த சகோதரருக்குச் சரிசமானமான சகோதரர்களாகிய நாகப்பன், நாராயணசாமி, ஹர்பட்ஸிங்க் முதலியவர்களிறந்ததைவிட என் சகோதரர் இறந்துபோனது ஒரு பெரிதல்ல. மேலும் அகாலத்தில் மாண்டுபோன வள்ளியம்மா, முனுசாமியின் சாவு மிகவும் என்மனதை வருத்துகின்றது. என்றாலும் என் தாய்தந்தையின் ஸ்தானத்திலிருந்த சகோதரர் இறந்துபோனதற்கு மனுஷசுபாவத்தின்படி நான் வருத்தப்படுகிறேன். கடவுளுக்குப்பயந்தும், மனச்சாட்சிக்கு விரோதமில்லாமலும், நாம் நடந்துவந்திருப்போமாயின், சாவு என்பது ஒரு

வாராலும் பயப்படக்கூடியதல்லவென்று சொல்வதே என்மனதில் குடி கொண்டிருக்கிறது. ஆகையால் மேலான நன்மையையடைய சாவு நேர்ந்திருக்கும்பொழுது, நாம் அதற்காகச் சந்தோஷப்படவேண்டு மேயொழிய வருந்துவதற்கு இடமில்லை. இதுபோலவே என் சகோ தரரும் நல்ல பதவியடைவதற்கே இறந்தாரென நான் நினைக்கிறேன். சாவுக்காகப் பயப்படாமல் நம்முடைய கடமைகளைப் பூர்த்திசெய் யும்பொழுது அச்சாவு நேரின், அதை அன்புடன் வரவேற்கவேண் டுமென்றே எதிர்க்காமலெதிர்க்கும் கட்சிக்காரர்களாகிய நாம் தெரிந்துகொள்ளவேண்டும். அவ்வாறே நாராயணசாமி முதலிய மூவரும் இறந்திருக்கின்றனர். எதிர்க்காமல் எதிர்த்த நம் நோக் கங்கள் திருப்திகரமாய் முடிவடையுமானால், இறந்துபோன என் சகோதரரின் மனைவியின் காலில் வீழ்ந்து வணங்கவும், எங்கள் குடும்பத்திற்குத் தலைவராயிருந்த என் சகோதரர் இறந்துவிட்டது பற்றி எங்கள் குடும்பத்திலுள்ள ஐந்து விதவைகளைக் காப்பாற்றவும் நான் இந்தியா செல்ல உத்தேசித்திருப்பதால், என் சகோதரர் இறந்துபோனதற்கு என்னிடம் அனுதாபம்பாராட்டிய அனைவரை யும் எனக்கு உத்தரவு கொடுக்கவேண்டுமென மிகவும் கேட்டுக் கொள்ளுகிறேன். சுதேச மித்ரன்.

* * * * *

தமிழ்ப்பண்டிதர்களின் கூட்டம்.

புதுக்கோட்டை சமஸ்தானத்தைச்சேர்ந்த மேலச்சேவல்பட்டி என்ற இடத்தில் "சன்மார்க்க சபை" என்று ஒரு சபை இருக்கிற தாகவும், அதன் 6-வது வருஷாந்தக் கொண்டாட்டம் சமீபத்தில் நடந்ததாகவும், அப்போது மகா மகோபாத்தியாய வே. சாமிநாதய் யர் தலைமையின்கீழ் 30 தமிழ்ப்பண்டிதர்கள் ஒன்றுசேர்ந்து சில நடவடிக்கைகள் நடத்தினதாகவும், நேற்று மித்திரனில் பிரசுரித் தோம். மற்ற பண்டிதர்களோடு அநந்தராமய்யர். கந்தசாமிக்

கவிராயர், சுந்தரேசய்யர், கோபாலகிருஷ்ணய்யர் இவர்களும் வந்திருந்தார்கள். சில உபந்நியாசங்கள்படிக்கப்பட்டன. மீட்டிங்கு கடைசியில் திருவாவடுதுறை மடாதிபதி ஸ்ரீலஸ்ரீ அம்பலவாணதேசிகரது ஔதாரியத்தையும் சிவபக்தியையும் சக்கிராப்பள்ளி தேவஸ்தானத்தைப் புதுப்பித்து உத்ஸவம் நடத்தினதையும் பண்டிதர்கள் வெகுவாய்ப் புகழ்ந்தார்கள். ஆயினும் இத்தோடுகூட எவ்வளவோ முக்கியமான காரியங்கள் பண்டிதர்கள்கூடிச் செய்யக்கூடியனவாயிருக்க, அவைகளில் எதையும்பற்றி இந்த முப்பது பண்டிதர்களும் தீர்மானஞ் செய்ததாகக் காணப்படவில்லை. தமிழ்க்கல்வி தற்காலத்தில் வெகு தாழ்ந்த ஸ்திதிக்கு வந்திருக்கின்றது. ஆங்கிலங்கற்ற தமிழர் தமிழில் பேசவாவது எழுதவாவது தெரியாமலிருக்கிறார்கள். தமிழ் நூல்களும் பத்திரிகைகளும் எழுதிப் பிரசுரிப்போரைக்காணோம். மதுரையில் பாண்டித்துரைத்தேவர் ஸ்தாபித்த மதுரைச்சங்கம் ஐவேஜியும் ஆதரவுமில்லாமல் அயர்கின்றது. இவைகள் எல்லாவற்றையும் தவிர, தமிழ்ப்பாஷையை தாங்கள் இயற்றிய அரும்பெரும் நூல்களால் வளர்த்துவந்த பேர்பெற்ற ஆசிரியர்கள், பிறந்து வளர்ந்து பிழைத்த இடங்கள் உருத்தெரியாமல் மறைந்து கிடக்கின்றன. திருவள்ளுவர், கம்பர் முதலிய பேராசிரியர்கள் பிறந்த இடத்திலாவது, மரித்த இடத்திலாவது ஞாபகக்குறிகள் ஸ்தாபிக்கப்படாமல், அவர்கள் வாழ்வையும் நூல்களின் பெருமையையும் ஜனங்கள் அறியாமலிருக்கிறார்கள். இந்த ஞாபகச் சின்னங்கள் ஸ்தாபிக்க இந்த முப்பது பண்டிதரும் ஏதேனும் யோசனை செய்யக்கூடாதா? தமிழாசிரியர்களைப் பெருமைப்படுத்துவதும் அவர்கள் செய்துவைத்த நூல்களைக் காப்பதும், தமிழ்ப்பாஷையைக் காலோசிதமாய் அபிவிருத்தி செய்வதும், தமிழ்ப்பண்டிதர்களுடைய கடமையில்லாவிட்டால் வேறு யார் கடமையாகும்? தேசபாஷைகளை ஆழக்கற்ற பண்டிதர்களுக்கு தேசத்தின் லௌகிக நன்மைக்குரிய பலமுக்கியமான காரியங்களில் எதையும் மேற்கொண்டு நடத்த சாமர்த்தியமில்லாமலிருப்பது அதிக விசனகரமானது.

சுதேசமித்திரன்.

நாகப்பட்டிணம் "இந்து மதாபிமான ஸங்கத்தின்" 23-வது வருஷ உத்ஸவக்கூட்டத்தில் 1914-ஞு மே-மீ 23, 24, 25 தேதிகளில் ஸ்ரீலஸ்ரீ ஸ்வாமி வேதாசலம் அவர்களது அக்கிராஸனத்தின் கீழ் நடைபெற்ற உபந்யாஸங்கள்:—

23-5-14 சனிக்கிழமை

காலை—அக்கிராசனாதிபதியின் முகவுரை.

,, இந்து மதம். அக்கிராசனாதிபதியவர்கள்.

,, ஹநுமான் தர்மம். ஸ்ரீமத் M. V. கோவிந்தராஜய்யங்கார் அவர்கள், நாமக்கல்.

,, ஒழுக்கம் ஸ்ரீமான் ஸ்வாமிநாத தேசிகரவர்கள் திருவாரூர்.

மாலை—மக்கள் கடமை ஸ்ரீமான் திரு. வி. கல்யாணசுந்தர முதலியாரவர்கள், சென்னை.

,, தமிழின் பெருமை. ஸ்ரீமத் C. S. முத்துசாமி அய்யரவர்கள் நாகப்பட்டிணம்.

,, முடிவுரை. அக்கிராசனாதிபதியவர்கள்.

24-5-14 ஞாயிற்றுக்கிழமை

காலை—ஹரிச்சந்திரபுராண தத்துவார்த்தம். ஸ்ரீமத் சசிராமப்பரவர்கள், திருவையாறு.

மாலை—காவிரிக்காதை. ஸ்ரீமான் T. சாமிநாதமுதலியாரவர்கள், மன்னார்குடி.

,, தமிழும், நாம் செய்யவேண்டிய கடமையும்.
ஸ்ரீமத் ம. கோபாலகிருஷ்ணய்யரவர்கள், மதுரை.

,, இந்து மதமும் கூட்டுறவுவிருத்தியும. (ஆங்கிலம்).
ஸ்ரீமத் V. வெங்கடாசாரியாரவர்கள், B. A., B. L.,

,, மேனாட்டுத் தத்வசாஸ்திரத்தினால் நாம் அடையும் உதவி.
ஸ்ரீமான் S. சச்சிதானந்தம்பிள்ளையவர்கள், சென்னை.

,, ஆன்ம இலக்கணம். ஸ்ரீமான் மணி. திருநாவுக்கரசு முதலியாரவர்கள், சென்னை.

,, முடிவுரை. அக்கிராசனாதிபதி.

25-5-14 திங்கட்கிழமை.

காலை—தாயுமானவரும் அவரது கொள்கையும். ஸ்ரீமான் T. S. தியாகராஜ ஞானியாரவர்கள், திருவாரூர்.

,, முத்திநெறி. ஸ்ரீமான் R. பாபு பிள்ளைபவர்கள் F. T. S. நாகபட்டிணம்.

,, சிவத்தொண்டு. ஸ்ரீமான் சுப்பிரமணிய தேசிகரவர்கள், தேவக்கோட்டை.

மாலை—அன்பு. ஸ்ரீமான் சோமாஸ்கந்தம் பிள்ளையவர்கள், யாழ்ப்பாணம்.

,, அடியார் பெருமை. ஸ்ரீமத் T. ஸ்ரீநிவாஸய்யரவர்கள் B. A. தஞ்சாவூர்.

,, விஷ்ணுதத்வார்த்தம். ஸ்ரீமத் அரங்கஸாமி அய்யரவர்கள். குளித்தலை

,, ஜீவகாருண்யம். ஸ்ரீமான் ச. மு. கந்தசாமி பிள்ளையவர்கள் காரணப்பட்டு (அருட்பிரகாசவள்ளலார், ஸ்ரீராமலிங்கஸ்வாமிகளின் சிஷ்யர்.)

,, நல்லாரிணக்கம். ஸ்ரீமான் ந. சிவகுருநாத பிள்ளையவர்கள் ஆத்தாக்குடி.

,, முடிவுரை. அக்கிராஸனாதிபதியவர்கள்.

இந்த சங்கம் முன்னால் முறையிட்டபடி வெறும் பழங்கதைப் பேச்சாய் முடியாமல், தற்காலத்துக்கு வேண்டிய அநேக முக்கியமான விஷயங்களை எடுத்துப்பேசி வந்தவர்களுக்கு உண்மையான வணக்கத்தை உண்டுபண்ணிய விஷயத்தை மிகவும் மெச்சுகின்றோம். இச்சங்கத்தாருடைய கூட்டுறவும் இந்தச் சங்கத்திற்கு உதவிசெய்பவந்திருந்த இதர சங்கத்தாருடைய கடமையுணர்ச்சியும் மிகவும் புகழத்தக்கதே. இத்தகைய சங்கங்கள் ஒவ்வொரு பட்டணந்தோறும் கிராமந்தோறும் ஏற்படுமென்று எதிர்ப்பார்க்கிறோம்.

பத்ராதிபர்.

தமிழும் ஸம்ஸ்க்ருதக் கலப்பும்

8-வது பக்கத்தொடர்ச்சி.

BY

V. இராமலிங்கம்.

இரண்டாவது சொன்ன "தக்ஷிண இந்தியாவில் த்ராவிடர் என்ற ஒரு ஜாதியார் த்ராவிடம் என்ற ஒரு பாஷையை வழங்கிக்கொண்டு வசித்து வந்தார்கள்" என்பதில் த்ராவிடர் என்ற ஜனங்களைப்பற்றி ஸம்ஸ்க்ருத க்ரந்தங்களில் பலவிடங்களில் பேசியிருந்தாலும், த்ராவிடம் என்ற பாஷையைப்பற்றி எந்த இடத்தில் சொல்லியிருக்கிறது? அப்படியிருக்க த்ராவிடம் என்ற ஒருபாஷை தென் இந்தியாவில் வழங்கிவந்ததென்பதற்கு என்ன அதிகாரம்?

த்ராவிடர் என்ற ஜனங்கள் 'த்ராவிடம்' என்றபாஷையை வழங்கிவந்ததாக ஏன் சொல்லக்கூடாது? அதற்கு ஆதாரம் வேண்டுவதில்லையென்றால், ஆரியர் என்ற ஜாதியார் ஆர்யம் என்றபாஷையை வழங்கிவந்திருக்க வேண்டியது சகஜமாயிருக்க, 'ஆரியர்' என்ற பதத்திற்குச்சற்றும் சம்பந்தமில்லாத 'ஸம்ஸ்க்ருதம்' என்றபாஷை எப்படி வந்திருக்கிறது என்பதற்குப் பதில் சொல்லவேண்டியிருக்கும். ஆகலால் ஜனங்களின் பெயரிலிருந்தே பாஷையின் பெயரை நிச்சயிக்க முடியாது.

இதன்பின் 'செந்தமிழ்' 258-ம் பக்கத்தில் "இந்நிலைமையில் நாம் விசாரிக்கவேண்டிய விஷயங்களாவன":—என்று நான்கு கேள்விகள் கேட்கிறார். அவற்றுள் முதலாவது கேள்வி சரியானதே. இரண்டாவது கேள்வியில், "தமிழ்பாஷைக்கு ஸம்ஸ்க்ருத பாஷை எக்காலம் முதல் எவ்வளவு வரை உதவி செய்திருக்கின்றது" என்பதில், 'உதவி' என்ற பதத்தால் தமிழின் வளர்ச்சி ஸம்ஸ்க்ருதத்தை ஒட்டியதே என்ற ஒரு சார்பான நிச்சயம் தோன்றுகிறபடியால், இக்கேள்வி "ஸம்ஸ்க்ருத பாஷை தமிழ்ப்பாஷையோடு எக்காலம் முதல் எப்படிக்கலந்தது?" என்ற வகையில் இருப்பது நியாயமாகும். மூன்றாவது கேள்வியிலும் அதேமாதிரி ஒரு சார்பான நிச்சயமிருக்கக் காணப்படுகிறது. நான்காவது கேள்வியில், 'தமிழ்' என்ற

பதம் 'த்ராவிடம்' என்ற பதத்தின் மரூஉ என்று, இல்லாத காரணங்களைக்காட்டி, நிரூபிப்பதினால் தமிழின் அபிவிருத்திக்குத் தான் எப்படிக்கடமை செலுத்தினார் என்பதைக்கவனியாது, தமிழை அபிமானிப்பதாகவும் அதன்மேற்பரிவுகாட்டுவதாகவும் பாசாங்குகாட்டுகின்றார்.

இதன்பின் தமிழின் காலங்களை வகுக்கிறார். அடுத்தாற்போல் அந்நிய ஆதாரங்களைப்பற்றி பேசுகின்றார். இதில் பாரதம், இராமாயணம், மனுஸ்ம்ருதி, ஹரிவம்சம் முதலிய ஸம்ஸ்க்ருத ஆதாரங்களை எடுத்துக்காட்டி, அந்த ஆராய்ச்சியின் பயனாக "மேற்கூறிய ஆதாரங்களால் நாம் அறியக்கூடிய முக்கிய விஷயம் யாதெனில்............. மேற்கூறிய க்ரந்தங்கள் எழுதப்பட்ட காலத்திலேயே இத்திராவிட தேசம் நல்ல நிலைமையில் இருந்ததென்பதே. ஆனால் மேற்கூறிய ஆதாரங்களால் த்ராவிட தேசமும் அதன் பிரிவாகிய சோழபாண்டிய கேரள தேசங்களும் மாத்திரம் குறிக்கப்பட்டிருக்கின்றனவேயொழிய, தமிழ் தெலுங்கு மலையாளம் கன்னடமென்ற நான்கு பாஷைகளைப்பற்றி ஓரிடத்திலும் சொல்லப்படவில்லை" என்றெழுதுகிறார். மேற்கூறிய ஆதாரங்களில் இந்த நான்கு பாஷைகளைப் பற்றியும் சொல்லப்படவில்லையென்பது உண்மையே. ஆனால் மேற்கூறிய ஆதாரங்களில் எந்த க்ரந்தத்தில் எந்த இடத்தில் 'த்ராவிடம்' என்ற பாஷையைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது?

இதற்குப்பின்னால், அசோக சக்ரவர்த்தி முதலாக (கி—மு 260) பூதர்கள் (கி—பி 68) காலம் வரையிலுமுள்ள அநேக அன்னிய ஆதாரங்களை அடுக்கடுக்காய் ஆராய்ந்து அவ்வாராய்ச்சியின் பலனாக (263-ம் பக்கம் கடைசி பாரா) "மேற்கூறியவைகளினின்றும் நாம் முக்கியமாய் அறியக்கூடியவைகளாவன" என்று நான்கு தீர்மானங்கள் எழுதுகின்றார்:—

1. அவற்றுள் முதலாவது தீர்மானத்தில், "இப்பொழுது தமிழ் நாடாய் வழங்கும் சோழ பாண்டிய தேசங்களும், கேரள தேசமும் முற்காலத்தில் த்ராவிட தேசங்களெனப் பெயர்பெற்று

த்ராவிட பாஷையென்ற ஒரு பொதுப்பாஷையை வழங்கிவந்தனர் என்றும்" என்றிருக்கிறது. இவர் காட்டிய ஆதாரங்களில் எந்த ஆதாரத்தில் த்ராவிட பாஷை என்ற ஒரு பொதுப்பாஷை வழங்கி வந்ததாகச் சொல்லியிருக்கிறது? எதிலும் இல்லாதிருக்க "மேற் கூறிய ஆதாரங்களினின்றும் த்ராவிட பாஷையென்ற ஒரு பொதுப் பாஷை தென்னாட்டில் வழங்கிவந்ததாக அறிகிறோம்" என்ற பொய் யான தீர்மானத்தை எழுதுவதேன்?

இது ஒருவகை மேஸ்மரிஸம். இவர் பின்னால் தமிழ் என்ற பதம் த்ராவிடம் என்ற பதத்தின் மரூஉ என்று நிரூபிக்கவேண்டி யிருக்கிறபடியாலும், இவருடைய வியாசம் முழுவதும் த்ராவிடம் என்ற பதத்தைக்கொண்டே கட்டப்பட்ட ஆகாயக்கோட்டையானதாலும், 'த்ராவிடம்' என்ற ஒரு பாஷை இருந்ததாக அடிக்கடி வற் புறுத்தி மயக்குகின்றார். இல்லாத ஆதாரத்தை இருப்பதாக ஜாலங் காட்டித்தமக்குவேண்டிய ஆதாரங்களைத் தாமே ஏற்படுத்திக்கொள் ளும் விஷயத்தில வெகு சாமர்த்தியமென்றே சொல்லவேண்டும்.

2. இரண்டாவது தீர்மானத்தில், "த்ராவிட பாஷையானது தற்காலத்திற்போல, தமிழ் தெலுங்கு மலையாளம் கன்னடமென நான்காகப் பிரியவில்லையென்றும்" என்றிருக்கிறது.

தமிழ் தெலுங்கு மலையாளம் கன்னடம் என்ற எல்லாப்பா ஷைகளுக்கும் ஆதிபாஷை 'த்ராவிடம்' என்ற பாஷையென்பது உண்மையானால், தமிழ் என்ற சொல்மட்டும் த்ராவிடம் என்றதன் மரூஉவாக இருக்கவும் மற்ற மூன்று பெயர்களும் த்ராவிடம் என்ற வார்த்தையின் சம்பந்தமே இல்லாதிருக்கவும் காரணமென்ன? அப் படியேதேனும் சம்பந்தமிருந்தால், அறிந்தவர்கள் அறிவிப்பார்கள் என்று வேண்டுகின்றோம்.

3. மூன்றாவது தீர்மானத்தில், "இந்த த்ராவிட தேசமானது கிறிஸ்து ஜனனத்துக்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னமேயே ராஜ்யங்களாய்ச் செழித்திருந்தனவென்றும்" என்றிருக்கிறது.

இந்தத்தீர்மானம் இவர் எடுத்துக்கொண்ட "த்ராவிடம் தமிழான" கதைக்கு எவ்விதத்திலும் உதவிசெய்வதாகக் காணவில்லை. இருந்தாலும் தமிழ்த்தேசம் முன்னால் அடைந்திருந்த பெருமையையும் இப்போது அடைந்திருக்கும் சிறுமையையும்பற்றிப் பரிவுகாட்டுகின்றார்போலும்.

4. நான்காவது தீர்மானத்தில், "அக்காலத்தில் ஆர்யபாஷையானது தமிழ்ப்பாஷையோடு கலக்காமல் த்ராவிட பாஷையானது ஒரு தனிப்பாஷையாயிருந்ததென்றும் தெரியவருகிறது. இதுதான் தமிழின் பூர்வகாலம்" என்றிருக்கிறது. இதில் 'அக்காலம்' என்பது இவர் இதுவரையில் சொல்லிக்கொண்டுவந்த பூர்வகாலமானால், இவருடைய எண்ணத்தின்படி அக்காலத்தில் தமிழ்ப்பாஷையேது? இதற்கு முன்னால் இரண்டாவது தீர்மானத்தில், "அக்காலத்தில் த்ராவிடபாஷை தமிழ் தெலுங்கு மலையாளம் கன்னடமென நான்காகப்பிரியவில்லை" யென்கிறார். இது உண்மையாயின், முதல் 'அக்காலத்திற்கும்' இரண்டாவது 'அக்காலத்திற்கும்' வித்யாசமென்ன? இந்தப்பாராவில், இவர் ஸம்ஸ்க்ருதம் தமிழ் த்ராவிடம் என்ற மூன்று பாஷைகளைப்பற்றிப் பேசுகின்றார். "ஸம்ஸ்க்ருத பாஷையானது தமிழ்ப்பாஷையோடு கலக்காமல் த்ராவிட பாஷை ஒரு தனிப்பாஷையாகவே இருந்தது" என்றால், இங்கே த்ராவிட பாஷையென்பது எது? தமிழ்தான் என்று நன்றாய் விளங்குகின்றது. இதினின்றும் 'அக்காலத்தில்' ஆர்யபாஷையாகிய ஸம்ஸ்க்ருதமும் த்ராவிட பாஷையாகிய தமிழும் தனித்தனி ஒன்றுக்கொன்று கலப்பில்லாமல் வழங்கிவந்தனவென்றும் இவரே ருசுப்படுத்துகின்றார். எனவே, உண்மையாயிருந்திருக்கவேண்டிய ஸம்ஸ்க்ருதமும் தமிழும் வேரூன்றி நிற்க, இவர் கற்பனையாக வருவித்துக்கொண்ட த்ராவிடம் என்ற மானஸ பாஷை மானஸமாகவே மறைகின்றது. ஐயோ பரிதாபம்! அநேக ஆதாரங்களைப் புரட்டிக்காட்டி, எந்த ஏட்டிலுமில்லாத த்ராவிடம் என்ற ஒரு யுக்திபாஷையை வெகு கஷ்டப்பட்டு ஏற்படுத்தி, அந்தத் 'த்ராவிடம்' என்பதின் மரூஉதான் 'தமிழ்' என்பது என்று

ருசுப்படுத்தவேண்டுமென்று கங்கணங்கட்டிக்கொண்டு வியாசமெழுத ஆரம்பித்த வியாசகர்த்தா, பரிதாபம்! தன்னையறியாமலேயே தன்னைக் காட்டிக்கொடுத்துவிட்டார்.

மூன்று சுபுத்திகள்.

சுபுத்தி 1:—ஆற்று நீரெல்லாம் பற்றி எரிந்துகொண்டிருந்தால் அதிலுள்ள மீன்கள் எங்கே போகும்?

சுபுத்தி 2:—ஏன்? அதற்கென்ன? அதன் கரையிலுள்ள மரங்களில் ஏறிக்கொள்ளும்.

சுபுத்தி 3:—அடே என்னடா? பைத்தியக்காரன்போல் பேசுகிறாய்? அந்த நிமிஷத்தில் மரங்களில் தொத்திக்கொள்ள அவைகள் என்ன? பசுமாடுகளா?

ஜாதி வித்தியாசத்தைப்பற்றி ஓர் அபிப்பிராயம்.

நவீனப்படிப்பில் தேர்ந்தவர்களுக்கு நமது மதத்தைத்தாக்க முக்கியமான இடம் நாம் ஜாதிபேதம் உடையவர்களாயிருக்கிறோமென்பதல்லவா? ஒவ்வொருவரும் ஸமானமான சுதந்திரங்களையடையவும் ஜனங்கள் ஒற்றுமைப்பட்டுப் பொது நலத்துக்குரியகாலத்தில் உழைக்கவும் இந்த ஜாதிபேதமே தடையாக நிற்கிறதென்று அநேகர் அபிப்பிராயப்படுகிறார்கள். ஆகையினால் இந்த முக்கியமான விஷயத்தைப்பற்றி நாம் சிறிது ஆராய்ந்து பார்ப்போம்.

முதலில் ஜாதிகள் மதத்தின் கோட்பாடா அல்லது ஜனசமூகத்தின் கோட்பாடாவென்று நிச்சயித்துக்கொண்டு பின்பு அதைக் குறித்து நமது அபிப்பிராயத்தை வெளியிடுவோம்.

மதமானது ஆசையையொழித்துக்கடவுளிடத்தில் நிஸ்சலமான பக்தியுடையவர்களாய்க் கடவுளைப் பிரத்தியக்ஷமாய் அனுபவித்து ஜன்மஸாபல்யமடைவதென்றே நாம் பெரியோரால் சொல்லிக்கேட்டும் சிறந்த கிரந்தங்களிலிருந்து படித்துமிருக்கிறோம். சங்கரர், ராமானுஜர் முதலிய மகா புருஷர்கள், "எனக்கு ஜாதியில்லை, வித்தியாசமில்லை" யென்று சொல்லியிருக்கிறார்கள். இவைகளையெல்லாம் சற்று யோசித்துப்பார்த்தால், மதம் ஆத்மார்த்தம் என்றே நிச்சயிக்க வேண்டியிருக்கிறது. கடவுளை நெருங்குகிறவர்களை ஜாதியாவது வேறு வித்தியாசங்களாவது பாதிக்கா. அவர்களை இல்லற தர்மத்தின் கோட்பாடுகள் கட்டுப்படுத்தா. அவர்கள் பேதாபேதங்களையொழித்து எல்லாவற்றையும் சமானமாக நோக்குபவர்கள். ஆகையினால் கடவுளையடைய சாதனமாகவுள்ள மதத்தில் ஜாதிபேதங்களைக்குறித்த கோட்பாடுகள் இருக்கக்காரணமில்லை.

மதத்தில் ஆவேசங்கொண்டவர்களுடைய கொள்கைகளையும் சுத்தநாஸ்திகவாதம் செய்பவர்களுடைய கொள்கைகளையும் தவிர்த்து இந்தவிஷயத்தைச் சரிபாக நோக்குங்கால், ஜாதிபேதமானது ஜனத்தின் கோட்பாடென்றே நிர்ணயிக்கலாம். அதாவது ஜனங்களுடைய நலத்தையுத்தேசித்தும் தேச க்ஷேமத்தையுத்தேசித்துமே இந்தக்கோட்பாடு ஏற்பட்டதென்று சொல்லலாம்.

ஆதியில், அதாவது ஜாதிகள் ஏற்பட்டகாலத்தில், நாலுவர்ணங்களுக்குள் தற்போது காணப்படுவதுபோல் சம்பந்தமில்லாமலிருக்கவில்லையென்றும், பின்பு வடமேற்கேயிருந்து வேறு ஜாதியார்கள் நமது தேசத்தில் குடியேறி நம்முள் கலக்கவாரம்பிக்கும்போது, நமது ஜாதிக்குள் ஏற்பட்ட சுத்தம் கெட்டுவிடுமென்று ஒருவர்க்கொருவர் கலப்பதை நிறுத்தினார்கள் என்றும் சரித்திரமூலமாய் நன்கு விளங்கும். இதுபோன்ற மற்றவிஷயங்களை ஆராய்ந்துபார்ப்போமானால், ஜாதிபேதமானது ஜனத்தின் நலத்தின்பொருட்டு அவ்வக்காலத்திற்குத் தகுந்தவாறு ஏற்பட்ட கோட்பாடென்றே கொள்ளலாம்.

இப்பொழுது ஜாதிபேதமானது பொதுஜனக் கோட்பாடென்று வைத்துக்கொண்டு, அதன் உண்மையை யாராய்வோம். நமது பெரியோர்கள் இகத்தையொட்டிச் சொல்லுங்கால், ஒரு தேச ஜனமானது மேன்மையடையவேண்டுமோனால் 4 வர்ணங்களையுமுடையதாயிருக்கவேண்டும். வர்ணங்களையெல்லாம் அழித்துவிட்டால் அந்தத் தேசத்திற்கு நாசம் அவசியம் ஏற்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். அதாவது ஒரு தேசம் மேன்மையடையவேண்டுமென்றால், பிரம்ம க்ஷத்திரிய வைசிய சூத்திரர்கள் அவரவர்கள் தர்மத்தை யாதொரு இடையூறுமில்லாமல் சரிவர நடத்தவேண்டும். நாம் நமது பெரியோர்கள் சொல்லியதில் முற்றும் நம்புகிறோம். வாஸ்தவத்தில் நமது பெரியோர்கள் சொல்லியிருக்கும் மேற்சொன்ன விஷயத்தில் அனேக உண்மைகள் இருக்கின்றன.

ஜனசமூகத்தின் நன்மையை உத்தேசித்து நான்கு வர்ணங்களும் அவசியம் ஏற்படவேண்டும். நமது தேசம் உன்னத பதவியை அடையவேண்டுமானல், நான்கு வர்ணத்தாரும் அவரவர்கள் தொழிலைச் சரிவர நடத்தவேண்டிய சௌகரியங்கள் ஏற்படவேண்டும்.

நாம் முதலில் நான்கு வர்ணத்தாரையும் அவைகளின் தொழிலையும் குறித்துச்சிறிது யோசித்துப்பார்ப்போம்.

பிராம்ம க்ஷத்திரிய வைசிய சூத்திராள் ஆகிய இவைகளே நான்கு வர்ணங்கள்.

பிராம்மணர்கள் அறிவைத் தங்களிடத்தில் பொக்கிஷமாகவுடையவர்கள். இவர்களுடைய முக்கியமான கடமையென்னவென்றல், தங்களுடைய அறிவை எல்லாருக்கும் பரவச்செய்வதே. இவர்கள்தான் தேசத்தில் உள்ள கல்வியின் நிலைமைக்கு உத்தரவாதிகள்.

க்ஷத்திரியர்கள் தங்களிடத்தில் தோள்வலிமையைப் பிரதானமாகக் கொண்டவர்கள். இவர்கள் தேசத்தை விரோதிகளிடமிருந்தும், உள்நாட்டு கலகங்களிலிருந்தும் காப்பவர்கள்.

வைசியர்கள் இவர்கள் வியாபாரம் கைத்தொழில் முதலியவைகளை விருத்திசெய்து தேசத்தைச் செல்வத்தில் தழைத்தோங்கச் செய்பவர்.

சூத்திரர்கள் *நிலத்தை உழுது பயிரிட்டு ஜனங்களுக்கு ஆகாரத்துக்கு முக்கியமான தானியங்களை உண்டுபண்ணுகிறவர்கள். இவர்கள் எவ்வளவுக்கெவ்வளவு நிலங்களை அதிகமாய் உழுது விவசாயத்தை நல்ல ஸ்திதிக்குக் கொண்டுவருகிறார்களோ, அவ்வளவுக்கவ்வளவு பொது ஜனங்களுக்கு நன்மையுண்டாகும்.

*நிலத்தையுழுவது வைசியத்தொழிலென்றே சொல்லக்கூடுமாயினும், ஒரு சாரார் கிருஷித்தொழிலைச் செய்பவர் சூத்திரர் என்று அபிப்பிராயப்படுகிறபடியாலும், தற்காலத்தில் கிருஷித்தொழில் சூத்திரர் கைகளில் இருப்பதனாலேயும், நாமும் அதே அபிப்பிராயங்கொள்ளுகிறோம்.

"ஜனசமூகம் மேன்மையடையவேண்டுமானால் நான்கு வர்ணங்களும் அததன் தர்மங்களைச் சரிவர நடத்தவேண்டும்" என்பதின் முக்கியமான கருத்தென்னவென்றால், ஒரு தேச ஜனம் மேன்மையடையவேண்டுமானால் அத்தேசத்தில் கல்வி எங்கும் நன்றாகப் பரவவேண்டும். நல்ல பலமுள்ள க்ஷத்திரியர்களால் (சேனைகளால்) காப்பாற்றப்படவேண்டும். செல்வம் தழைத்தோங்க வியாபாரம் கைத்தொழில் நல்ல ஸ்திதியில் இருக்கவேண்டும். ஜனங்களுக்கு அவசியமான உணவுப்பொருள்கள் யதேஷ்டமாகச் சுளுவில் கிடைக்கும்பொருட்டு விவசாயம் விருத்தியடையவேண்டும்.

சரித்திரத்தை ஆராய்ந்து பார்ப்போமானால், அனேக பழமையான ராஜ்யங்கள் அதி உன்னத பதவியையடைந்து நாளடைவில் க்ஷீணித்தும் அழிந்தும் போனதற்குக்காரணம், ஒரே வர்ணத்தார் பிரபலப்பட்டு அந்த வர்ண தர்மமே மிகுந்திருந்ததனால் என்று நன்கு விளங்கும். ஐரோப்பாக்கண்டத்திற்கே அறிவைப்புகட்டின கிரீஸ்தேசத்தின் தற்கால நிலைமையென்ன? வியாபாரத்தில் முக்கியமாகவிருந்த வெனீஸ் ஜீனோவா முதலியவைகள் எங்கே? கிழக்கில் சீனதேசத்தை ஒருகாலத்தில் ஆக்கிரமித்த மொகலாயர் எங்கே? ஸ்பெயின் தேசத்தை ஜெயித்து பாரிஸ் வரையில் சென்ற மூரிஷ் ஜாதியார்கள் எங்கே? யோசித்துப்பாருங்கள்.

பிராம்மணர்களானாலும் க்ஷத்திரியர்களானாலும் வைசியர்களானாலும் யாவரானாலும்சரி. ஒருவர் மாத்திரம் ஒரு தேசத்தில் மிகுந்திருந்து அந்த வர்ண தர்மமே மேற்பட்டிருந்தால், அத்தேசம் கூடியசீக்கிரத்தில் க்ஷீணிப்பதல்லாமல் அழிந்தும் போகும். தற்காலத்தில் நடக்கும் நவீனக்கிளர்ச்சிகளைக் கவனிப்போமானால் இதன் உண்மை புலப்படும். சில தேசங்களில் சேனைகளையே அபரிமிதமாக அதிகப்படுத்துவதினால் வேறு வழிகளில் அதே அளவில் விர்த்தியேற்படாமல் நாளடைவில் தேசத்திற்கு நாசம் உண்டாகக்கூடுமென்று சில புத்திமான்கள் அபிப்பிராயப்படுகிறார்கள். சில தேசங்

களில் விவசாயத்தையே கவனியாமல் கைத்தொழில்களிலும் வியாபாரத்திலுமே அதிக ஊக்கம் காட்டப்பட்டுவருகிறது. உதாரணமாக இங்கிலாந்தில் கைத்தொழில்களும் வியாபாரமுமே முக்கியமாகவிருக்கிறது. இங்கிலாந்தில் மஹா நெபோலியன் (Nation of shop eepers) 'வியாபாரஞ்செய்யும் ஒரு தேச ஜனம்' என்று சொன்னதற்கு ஏற்ப வைசிய விருத்தியே மேலிட்டிருக்கிறது. அவர்களுக்கு உணவுப்பொருள்களெல்லாம் வேறு தேசங்களிலிருந்தே வரவேண்டும். வைசிய விருத்தியிலுள்ள தேசஜனத்தின் நிலைமையைப்பாருங்கள். எவ்வளவுதான் செல்வத்தில் மிகுந்திருந்தும் தங்களுடைய உணவுப்பொருள்களுக்கு பிரதேசங்களையே எதிர்பார்க்க வேண்டும். ஏதோ பல காரணங்களாலும் சில அசந்தர்ப்பங்களாலும் வேறு தேசங்களிலிருந்து அனுப்பப்படும் உணவுப்பொருள்கள் சில மாதங்களுக்கு நிறுத்தம்செய்யப்பட்டதென்று வைத்துக் கொள்வோம். அப்போது இங்கிலாந்தின் நிலைமையென்ன? இதன் பொருட்டே இங்கிலாந்திலும் விவசாயத்தை விருத்திசெய்யவேண்டுமென்று சிலர் அபிப்பிராயப்படுகிறார்கள்.

அதாவது ஒவ்வொரு தேசமும் கூடியவரையில் நான்கு வர்ணத்தாரையும் நல்லநிலைமைக்குக் கொண்டுவந்து தேசத்தை பலமான அஸ்திவாரத்தில் ஊர்ஜிதப்படுத்தவேண்டுமென்பதே. ஒவ்வொரு தேசத்திலும் நான்கு வர்ணங்களும் அதததன் தர்மத்தை நடத்தப் போதுமான சௌகரியங்கள் இல்லாமலிருக்கும். உதாரணமாக ஸ்காட்லண்டில் சூத்திரர்களுக்கு (விவசாயம்) விசேஷமான சௌகரியங்களில்லை. இங்கிலாந்தில் சூத்திரர்கள் கவனிக்கப்படுவதில்லை. ருஷியா விவசாயிகளுக்கு அனுகூலமாயிருந்தாலும் வைசியர்களுக்கு விசேஷ அனுகூலமுள்ளதல்ல. பிரான்ஸ் ஜப்பான் ஜெர்மனி யுனைடெட்ஸ்டேட்ஸ் ஆப்பிரிக்கா அமெரிக்கா முதலான தேசங்களில் நான்கு வர்ணத்தாருக்கும் இயற்கையான சௌகரியங்கள் இருக்கின்றன.

நமது இந்தியநாடு எவ்வளவுதூரம் நான்குவர்ணத்தாருக்கு முகந்ததாயிருக்கிறதோ என்று பார்ப்போம்.

வித்தியாதானமே எல்லாதானங்களுக்கும் சிறந்ததென்று அறிவு புகட்டும் விஷயத்தில் தனம் வாங்கக்கூடாதென்று கொண்ட நமது நாட்டில் பிராம்மணர்களுக்காவது அவர்களது தர்மத்தை சரிவர நடத்தவேண்டிய சௌகரியங்களுக்காவது குறைவா? உலகத்தையே அறிவென்னும் ஜோதியால் பிரகாசப்படுத்த வெளியே அவ்வப்போது மஹா புருஷர்களையனுப்பி இத்தேசத்தில் பிராமண தர்மம் சரிவர நடத்த யாதேனும் இடையூறுமுண்டோ?

க்ஷத்திரியர்களைக் குறித்துப்பார்ப்போம். மேல்நாட்டாரும் சரித்திரக்காரர்களும் நம்மிந்தியநாடு க்ஷத்திரியர்களுக்கு அனுகூலமானதல்லவென்று சொல்லுகிறார்கள். இந்தியாவின் சீதோஷ்ணம் க்ஷத்திரியர்களின் பலத்தை நாளுக்குநாள் குறைவுபடுத்துந் தன்மையையுடையதென்றும் சொல்லுகிறார்கள். அவர்களுக்கு நான் ஒரே விடைசொல்வேன். இந்தியாவையே அனேக ஆயிரவருஷங்களாக ஸ்வதேசமாகக் கொண்ட மகாராஷ்டிரர்கள் 18-ம் நூற்றாண்டில் இந்தியாவின் ¾ பாகத்தை ஆக்கிரமித்ததின் தாத்பர்யமென்ன? உலகத்தையே வியக்கச்செய்த பஞ்சாபிலுள்ள சீக்கியர்கள் என்ன, குர்க்கா ஜாதியார் என்ன, ஜாட் என்பவர் என்ன, ராஜபுத்திரர் என்ன, பாடலீபுரத்தையே ஒருகாலத்தில் ஜயித்த தென்னாட்டார் என்ன இவர்களெல்லாம் நமது தேசத்தில் இருக்குமளவும் க்ஷத்திரியர்களுக்குக் குறைவா? இவைகளைச் சரித்திரக்காரர்கள் அறியவில்லையோ! மேலும் நமது தேசத்தில் எல்லாவித வேலைகளையும் செய்ய சீதோஷ்ணம் அங்கங்கே மாறுபட்டிருக்கிறதென்று மேல்நாட்டாரறியாரோ! சரித்திரக்காரர்கள் தாமறியாரோ!

வைசியர்களை எடுத்துக்கொண்டால் அவர்களுக்கும்வேண்டிய வசதிகளுக்குக் குறைவில்லை. கைத்தொழில்களுக்கு வேண்டிய சரக்குகளெல்லாம் நம் தேசத்திலேயே ஆக்கப்படுகின்றன. இந்தி

லாந்துபோன்ற தேசங்களில் கைத்தொழில்களுக்குவேண்டிய சரக்குகள் வேறுதேசங்களிலிருந்து வரவேண்டியிருக்கிறது. **R. C.** டட் இந்தியாவின் கைத்தொழில்களைப்பற்றி எழுதியிருக்கும் புஸ்தகத்தை வாசிப்போமாளுல், நமது தேசம் வைசியவிருத்தியில் எப்படி முன்னடைந்திருந்ததென்றும் ஐரோப்பிய வர்த்தகர்கள் நம்முடன் போட்டிபோட முடியாமல் நமது வைசியரைக்கெடுத்து நம்மை சூத்திரர்களாக மாத்திரமாக்க (To make us produce raw materials) எப்படி முயற்சித்தார்களென்றும் நன்குவிளங்கும்.

கடைசியாக சூத்திரர்களை யெடுத்தால் அவர்களுக்கும் நமது தேசம் விசேஷ அனுகூலங்களை இயற்கையாகவே அமைத்திருக்கிறது. கங்கா சிந்து சமவெளியின் செழிப்பல்லவா உலகத்தையே மயக்குகிறது. இதைக்குறித்து அதிகம் சொல்லவேண்டியதில்லை.

நமது தேசம் இயற்கையிலேயே நான்கு வர்ணங்களுக்கும் விசேஷ அனுகூலங்களையுடையதாக விருக்கிறது. செயற்கையில் தற்காலத்தில் நமது தேசத்தின் நிலைமையையே கவனிப்போம்.

பிராம்மண தர்மம் சரியாக நடத்தப்படுவதில்லை. அது நமது தேசத்தின் படிப்பை வேறு நவீனதேசங்களோடு ஒப்பிட்டுப்பார்த்தாலே நன்கு விளங்கும். க்ஷத்திரிய தர்மம் நம்மையாள்பவரால் சரியாக நடத்தப்பட்டுவருகிறது வைசிய தர்மம் குலைந்து போய் விட்டது. வைசியர்களாலல்லவோ தேசம் செல்வத்தில் தழைத்தோங்கவேண்டும்? வைசிய தர்மம் சரியாக நடத்தப்படாததாலல்லவோ நாமிவ்வளவு தரித்திரர்களானேம். பஞ்சத்தாலும் பிணியாலும் வருஷந்தப்பாமல் கஷ்டப்படுகிறேம். கடைசியாக சூத்திரர்கள் தங்கள் தர்மத்தை ஒருவாறுக நடத்துகிறார்களென்றே சொல்லலாம். ஆனல், அவர்கள் விவசாயத்தை நவீனமுறைகளின்படி விருத்திசெய்ய அதிக ஊக்கம் காட்டுகிறார்களில்லை.

நமது தேசத்து க்ஷத்திரியர்கள் நம்மை யாள்பவராகையால், சூத்திரதர்மம் மாத்திரம் இந்தியாவில் ஒருவாறு நடையேறிவருகி

றது. இதைத்தான் ஐரோப்பியர்களும் எதிர்பார்த்தார்கள். நாம் வர்ணங்கள் வேண்டாம், எல்லாரும் ஒரே ஜாதியாகவேண்டுமென்று சண்டைபோட்டது நாம் சூத்திரர்களாக மாத்திரமாவதிலே முடிந்ததுபோலும்.

இந்திய சகோதரர்களே! ஒருதேசம் மேன்மையடையவேண்டுமானால், பிரம்ம க்ஷத்திரிய வைசிய சூத்திரர்கள் அவரவர்கள் தர்மங்களைச்சரிவர நடத்தவேண்டும். இதுதான் நமது தேசத்தை மேன்மைப்படுத்த முக்கியமான வழியென்றுவைத்துக் கொள்ளுங்கள். பிராம்மண தர்மத்தையும் வைசிய தர்மத்தையும் முற்படுத்துங்கள். நான்கு வர்ணங்களும் அததன் வேலையை சரிவாநடத்தபிரயத்தனப் படுங்கள். அதுவே நமது தேசத்தையுயர்த்தவழி.*

S. V. நாராயணன்.

பழமொழித்திரட்டு.

21. அடியாதமாடு படியாது.
22. அடுத்துவந்தவர்க்கு ஆதரவுசொல்லுவோன் குரு.
23. அடுத்துக்கெடுப்பான்கபடன் கொடுத்துக்கெடுப்பாள்மடந்தை
24. அடுத்துச்சொன்னால் தொடுத்தகாரியம் முடியும்.
25. அட்டமத்துச்சனி நட்டம்வரச்செய்யும்.
26. அணைகடந்தவெள்ளம் அழுதாலும் வருமா?
27. அண்டாதபிடாரி ஆருக்கடங்குவாள்?
28. அண்டத்திலில்லாதது பிண்டத்திலுண்டா?
29. அதிகாரிவீட்டில் திருடித் தலையாரிவீட்டில் ஒளித்தான்.
30. அதிக ஆசை அதிக நஷ்டம்.

---

*இந்த வ்யாஸம் நாமக்கல் ஸன்மார்க்கசங்கத்தில்...............கூட்டிய கூட்டத்தில் படிக்கப்பட்டது.

இந்திய ஸ்திரீகள்

"கல்வியை தேசீயபாஷையில் கொடுப்பதேன்?"

ஓர் பிரதிவாதம்

லோக மித்ரன் பத்திராதிபருக்கு.

ஐயா,

தங்களுடைய சித்திரை மாதத்திய மித்ரனில் மகா-ள-ள-ஸ்ரீ S. V. நாராயணய்யர் அவர்கள் மிகவும் நேர்த்தியான ஓர் வியாசம் மேற்சொன்ன விஷயத்தைப்பற்றி வரைந்துள்ளார் அவரது ஆழ்ந்த யோசனையும் விரிந்த அறிவும் செவ்வனே படித்த படிப்பும் எனக்கு இல்லாவிடினும், நான் எனக்குத்தோன்றின சிற்சில அபிப்ராயபேதங்களைத் தங்கள் மித்ரன்மூலமாய் வெளியிடத்துணிந்தேன்.

ஆரம்பிக்க, இவரது வ்யாஸவிஷயங்களே ஒன்றுக்கொன்று முற்றும் ஒவ்வாதனபோற் புலப்படுகின்றன. ஏனெனில், நாம் கவனிக்கவேண்டிய அம்சம் ஒன்றுளது. நமது தேசத்தில் எழுதப் படிக்கத்தெரிந்த ஸ்திரீபுருஷர்கள் எத்தனை? தெரியாதவர்கள் எத்தனை? அதிக நாகரீகமடைந்திருக்கும் ஜபான் அமெரிக்காவிலுள்ள ஐக்கியமகாணங்கள் இங்கிலாந்து பிரான்ஸ் முதலிய தேசங்களில் படித்தவர்கள் எத்தனை? படியாதவர்கள் எத்தனையென்று கணக்கிட்டுப்பார்த்தால், நமது தேசம் இருக்குமிடமே தெரியவில்லை. தவிர, சென்ற கானேஷ்மாரி கணக்குகளைப் பார்த்தாலுங்கூட (cencus report of 1911) நமது தேசம் படிப்புவிஷயங்களில் மிக்க க்ஷீண ஸ்திதியிலிருக்கிறதென்பது உள்ளங்கை நெல்லிக்கனிபோல் புலப்படும்.

நிற்க, எழுதப்படிக்கத்தெரிந்த நமது ஸ்திரீபுருஷர்களில் எத்தனை ஸ்திரீகள் படிக்கக்கூடும்? ஆயிரத்திற்கு ஐந்நூறு பெயர்கள் படிக்கின்றார்களா? இல்லையே! ஆயிரத்திற்கு ஐம்பதுகிட்டுவதுகூடக் கஷ்டமாயிற்றே! இந்த ஐம்பது ஸ்திரீகளில் கூட எத்தனைபேர்கள் உபர்தாக்கல்வியை யடைய விரும்பி படிக்கின்றார்கள்? சென்ற

கானிஷ்மாரிக்கணக்குப் பிரகாரம் நமது தேசத்தில் எழுதப்படிக்கத் தெரிந்த ஸ்திரீ புருஷர்கள் 100-க்கு 15 பேர்கள்தாம். இதில் ஸ்திரீகள்மட்டும் 3¼-க்கு 9 ஆகத்தெரியவருகின்றது. அதாவது நமது ஜனங்களில் 100-க்கு 4 ஸ்திரீகளுக்குத்தான் எழுதப்படிக்கத் தெரியும். ஆனதுபற்றி, நமது ஐயர் "இந்திய ஸ்திரீகள்" என்று தலைமைகட்டி, அதற்குக்கீழ், "கல்வியை தேசியபாஷைகளில் கொடுப்பதேன்?" என்ற விஷயத்தைப்பற்றிச் சொல்லுவதைக் காட்டிலும், "இந்திய புருஷர்கள் என்றும், கல்வியை தேசியபாஷைகளில் கொடுப்பதேன்?" என்றும் மாற்றி எழுதியிருந்தால் மிக்க யுக்தமாகவிருந்திருக்கும். அல்லது "இந்திய ஸ்திரீகள்" என்று சொல்லாமலே, "கல்வியைத் தேசியபாஷைகளில் கொடுப்பதேன்" என்று விஷயத்தைப்பற்றி எழுதியிருந்தாலே போதுமானதன்றோ?

நமது ஐயர் அவர்களது வ்யாஸம் முழுமையும் நமக்கு ஆச்சரியத்தையும், வ்யஸனத்தையும் உண்டாக்குகின்றது. சொல்லுகிறார் ஐயர், "ஒவ்வொருபாஷையும் அதற்கென்று ஏற்பட்ட இயற்கையான குணங்களையுடையதாகவும் இருக்கின்றது" என்று.

அப்படியானால், தமிழின் இயற்கையான குணங்கள் யாவை? ஸம்ஸ்க்ருதத்தின் குணங்கள் யாவை? ஆங்கிலத்தின் குணங்கள் யாவை? நமக்குத்தெரிந்தமட்டில், பாஷைகளின் குணங்கள் என்று அழுத்தந்திருத்தமாகச் சொல்லுவதில், இலக்கண இலக்கிய விஷயங்களைமட்டும் குறிக்குமேயொழிய வேறொன்றுமில்லை. "பாஷை ஒவ்வொன்றும் அவைகளின் சுபாவத்துக்குத் தக்கவாறு ஜனங்களின் நடையுடைபாவனைகளை மாற்றக்கூடுமென்பது எல்லோரும் ஒப்புக்கொள்ளும்படியான விஷயம்" என்று நமது ஐயர் சொல்லித்தான் நாம் கேட்டோம். வேறெவரும் சொல்லவில்லை. நாம் எந்த சரித்திரத்தில் ஓர் தேசத்தாருடைய பாஷையானது மற்றோர் தேசத்தாருடைய 'நடையுடை பாவனைகளை' மாற்றியிருப்பதாகக் கேட்டிருக்கிறோம்? ஓர் பாஷை மற்றோர் பாஷையில் சிற்சில வித்யாசங்களை உண்டாக்கும் சக்தியுடைத்தாயுளது என்றால், வெகு ஸஹஜ

மாக நம்பலாம். அல்லது ஓர் பாஷையைப் பேசும்ஜாதியார் வேறு பாஷையைப் பேசும் மற்றோர்ஜாதியாரிருக்கும் தேசங்களில் குடியேறி, அந்த ஜாதியாருடன் கலந்துகொண்டாலொழிய 'நடையுடை பாவனைகளில்' வித்யாசம் ஏற்படக் காரணமேயில்லை. அப்படியில்லாமல், நமது ஐயர் சொல்லுமாறுபார்த்தால், நாம் இரண்டு அல்லது அநேகதடவைகளிலேயே மாறிப்போயிருந்திருக்கவேண்டும். அதாவது, முஹமதியர் அரசாண்டகாலத்தில் நாம் முஹமதியர்களாகவும், ஆங்கிலேய அரசாக்ஷியில் நாம் இப்பொழுது கிறிஸ்துவர்களாகவும் இருந்திருக்கவேண்டுமென்பது திண்ணம். நாம் அவ்வாறு மாறுபாடடைந்ததற்கும் அடையாததற்கும் நமது தேசசரித்திரமே ஸாக்ஷி.

இன்னும் சொல்லுகிறார், "தேசீயபாஷைகளில் நாம் ஒரு வார்த்தையை எப்படி அர்த்தம் கொள்ளுகிறோமோ, அப்படியே வேறு பாஷையைப் பேசுகிறவர்கள் அர்த்தம் கொள்ளுகிறதில்லை. உதாரணமாக, 'குடியாதே' என்றால் நாம் குடியை அறவே ஒழித்துவிட வேண்டும் என்று சொல்லுகிறோம். ஐரோப்பியர்கள் அதேவார்த்தைக்கு (Drink not) "அதிகமாகக் குடிக்காதே, மிதமாகக்குடி' என்றும் அர்த்தம் கொள்ளுகிறார்கள்" என்று.

இங்குச்சொன்ன இரண்டு வாக்யங்களுக்கும் எவ்விதமான சம்பந்தமிருந்தபோதிலும் இருக்கட்டும், அதை நாம் கவனிக்கவில்லை. உதாரணமாகவரைந்துள்ள வாக்கியம் மிக்க விபரீதமாக இருக்கிறது. ஓர் பாஷையின் ஓர் வார்த்தைக்கு மற்றோர் பாஷையிலிருந்து சரியான பதம் பொருக்கியெடுத்தல் கொஞ்சம் கடினந்தான். ஆனால் இவ்வித இரண்டுவார்த்தைகளும் ஒன்றுக்கொன்று பொருளில், "தெற்குத்ருவம் வடக்குத்ருவம்" போன்று வித்யாசமடைய எண்ணவுந்தகுமோ? 'Drink not' என்னும் வாக்யத்திற்கு மிதமாகக் குடித்தல் என்று எந்த ஐரோப்பியர் நமது நேயருக்குச் சொல்லியிருப்பாரோ தெரியவில்லை. அல்லது அவர் எந்தப் புத்தகத்தில் வாசித்தாரோ தெரியவில்லை. இதுமாதிரி பார்த்தால் 'Steal not' (திருடாதே) என்ற வாக்யத்திற்கு அதிகமாகத் திருடப்படாது

கொஞ்சமாகத் திருடவேண்டும் என்றல்லவோ பொருள்படவேண்டும்?

இன்னும் "அரைக்குடுமிவைத்தலும்.....................தேசிய பாஷைகளைத்தவிர்த்து வேறுபாஷைகளில் விஷயங்களைக் கற்பதாலும் அவைகளை வெளியிடுதலாலுமல்லவோ?"

இதில் இவர் சொல்லியது முழுமையும் அல்லது கிஞ்சித்பாகமாவது சரியா? தேசியபாஷைகளைத்தவிர்த்து வேறுபாஷைகளில் விஷயங்களைக் கற்றவர்களில் எத்தனைபேர்கள் இவர் சொன்னமாதிரி நடக்கின்றார்கள்? அல்லது இவர்கள்தானா செய்கிறார்கள்? நேயர்களே! ஒன்றுமேபடிக்காது எழுத்துவாசனையேயில்லாத எத்தனை வண்டிக்காரர்கள் எத்தனை பறையர் பரிசாரர்கள் (Boys) இன்னும் ஆங்கிலம் அல்லது வேறு எந்தபாஷையும் தெரியாத எத்தனை ஜனங்கள் 'தேசிய ஆசாரங்களுக்கு முற்றிலும் விரோதமான' செயல்களைச் செய்கிறார்கள்! அதற்கு நமது ஐயர் என்ன சொல்லுகிறார்? ஆங்கிலப்படிப்புத்தானோ இதற்குக்காரணம்?

இன்னும் ஓர்வார்த்தையோடு நாம் முடித்துவிடுவோம். "சீனதேசத்தான் இவன், ஜப்பானியன் இவன், இங்கிலீஷ்காரன் இவன் என்று வெகுசுலபமாகக் கண்டுபிடித்துவிடலாம்." 'ஆனால் இந்தியன் இவனென்றுகண்டுபிடிப்பது துர்லபம்.' தடித்த எழுத்திலிருப்பவை நம்முடையவை. குடுமியைக் கத்தரித்ததனாலும், தலையை மொட்டையடித்ததனாலும், முன்குடுமி வைத்ததனாலும் இந்தியர்களைக் கண்டுபிடிக்கக்கூடவில்லையாம்! மிக்க பரிதாபம்தான். இவர் எந்தப்பட்டணத்தில் இவ்விதமாறுதலடைந்த இந்தியர்களைக் கண்டுபிடிக்கமுடியாமல் திகைத்துத்தியங்கிவிட்டாரோ பாவம்! நமது வ்யாசகர்த்தா, "ஜப்பானியரும் மேல்நாட்டாருடைய சாஸ்திரங்களைக் கற்றுவருகிறார்கள். அவர்கள் ஏன் மாறவில்லை? இந்தியர் மட்டும் மாறுவானேன்?" என்று கேட்கிறார். இப்பொழுது நாம் இவரை ஓர் கேள்விகேட்போம். இவர் ஜப்பான்தேசத்துக்குப் போயிருக்கின்றாரா? அல்லது ஜப்பானியரைப்பற்றியாவது புத்தகங்

கள் ஏராளமாய் வாசித்திருக்கிறாரா? இவை அடாத கேள்விகளாக நினைக்கக்கூடும். ஆனால் பொறுப்பற்ற சிற்சில சங்கதிகளை உலகத்திற்கு வெளியிடுவது எவ்வளவு தப்பென்பதைக் காட்டவே இவ்வாறு நாம் கேட்கத்துணிந்தோம். படியாதிருந்தால், மேல்நாட்டாருடைய நாகரீகம், (மேல்நாட்டாருடைய பாஷைகளல்ல) ஜப்பானிய 'நடைபுடைபாவனைகளை' எவ்வளவுதூரம் மாற்றியிருக்கின்றதென்பதைப் படித்துத்தெரிந்துகொள்ளும்படி மன்றாடிக் கேட்டுக்கொள்ளுகிறோம். 1. *'All about Japan'—G. A. Natesan & Co., and 2. 'Peeps into many lands'—by John Finnemore.* இவ்விரண்டு புத்தகங்களை இவர் படித்தால் இவருக்கு விஷயங்கள் விரிவாகத்தோற்றும் என்பதில் நமக்குச்சங்கையில்லை.

நாம் இதுவரை நமது ஐயர் அவர்களுடைய அபிப்பிராயங்களை ஒருவாறு தெரிவித்தோம். அவர் எக்காரணங்கொண்டு 'கல்வியைத் தேசியபாஷைகளில் கொடுக்கவேண்டு'மென்று சொல்லுகிறாரோ, அக்காரணம், தேச அனாசாரமாகிய பயத்தினால் அவரையறியாது ஜனித்த எண்ணமாக நாம் கொள்வோம். எனினும், கேள்வியோ பெருத்தகேள்வி. ஆதல்பற்றி அதற்கு நமக்குத்தெரிந்தவரை தகுந்த முகாந்திரங்களைக்கொண்டு உத்தாமுரைப்போம். நமது பள்ளிக்கூடங்களிலும் கலாசாலைகளிலும் ஆங்கிலபாஷைமூலமாகவே சரித்திரம் கணிதம் இன்னுமற்ற சாஸ்த்ரங்களும் நமது பிள்ளைகளுக்குக் கற்பிக்கப்படுகின்றன. நமது கக்ஷி என்னவெனில், ஆங்கிலபாஷைமூலமாகக் கற்பிப்பதைவிட்டுத் தமிழிலேயே சாஸ்த்ரப்பயிற்சியுண்டாக்கவேண்டுமென்பதே. ஏனெனில், நமது பிள்ளைகள் படிக்குங்காலும் அல்லது விடைபளிக்குங்காலும் ஆங்கில பாஷைகளில் படித்து அவைகளைத் தமிழில் மொழிபெயர்த்து பிற்பாடு விஷயங்களை ஆராய்ந்து ஏற்றுக்கொள்ளவேண்டியிருக்கிறது. தமிழிலேயே அல்லது வேறு தேசியபாஷையிலேயே கற்பித்தால், இந்த 'ஒருவேலைக்கிருவேலை' யில்லாமல்போய்விடுகிறது. இது ஓர் முக்கியகாரணம். இதைத்தவிர்த்து மற்றொன்றுமுண்டு. அதாவது, இந்தியர்களிலனேகர் வீட்டிலும் வெளியிலும் தாய்ப்பாஷை

யில் பேசுவதைவிட்டு ஆங்கிலபாஷையில் பேசுவதையே வழக்கமாக்கிவிட்டார்கள். சிலர் தாய்ப்பாஷையில்பேச வெட்கமும் படுகின்றார்கள். சிலர் முழுமையும் தாய்ப்பாஷையிலேயே பேசச் சக்தியற்று ஆங்கிலமும் தாய்ப்பாஷையும் கலந்துபேசுகின்றார்கள். இவ்விதமாகவிருத்தல் தேசத்திற்கு ஹானியாதல்பற்றி நாம் தேசியபாஷையில் நமது பிள்ளைகளுக்குக் கற்பிக்கவேண்டுமென்று வாதிக்கின்றோம்.

பாலன்.

உபதேசங்கள்.

"தாமின் புறுவ துலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார்"——திருக்குறள்.

"தன்னையறிபவன் உலகையறிவான், தன் சுகத்தைத்தேடுபவன் உலகின்சுகத்தை நாடுவான், தனது துக்கநிவ்ருத்தியை யிச்சிப்பவன் உலகினர்க்கு இரங்கிக் கருணைபுரிவான்."

ஓர் வைணவர்.

"உலகு கடவுளின் குடும்பம், ஏனெனில், உலகு அவராலேயே காக்கப்பட்டு நிற்கிறது. ஆகையால் கடவுளின் பக்தியிற்சிறந்தவர் என்று சொல்லப்படுபவர், கடவுளின் குடும்பமாகிய உலகத்தாரிடம் நிறைந்த கருணையோடிருக்கவேண்டும்."

"ஜனங்களை வெறுப்பவன், எவ்வளவு தேஹபலமுள்ளவனானாலும் பலமுள்ளவனாகமாட்டான். ஜனங்களிடம் கோபத்தைக் காட்டாமல் அடக்குபவனே, உலகத்தில் பலவானாக மதிக்கப்படுவான்."

மகம்மதுநபி.

பதினைந்து வினாக்கள்.

1. பூமி பிளவுபடாமல் ஒரேரூபமாக இருந்தால், சிலவிடங்களிற் பொன் வெள்ளி முதலிய உலோகங்களும், சிலவிடங்களில் மண் கல் முதலிய பேதாபேதங்களும், சிலவிடங்களிற் கெந்தகம் உமணமுதலிய பொருள்களும் உண்டாவதற்குக் காரணங்கள் என்னை?

2. அப்புவிற்கு ஆதாரபூதங்கள் எவை?

3. அக்கினியின் சுயரூபமென்னை? இதர பொருள்களைப் பற்றிருக்கும்வகையில், பெயர் என்னை? அஃது குணியா? குணமா?

4. வாய்வு எங்குதித்தது? அஃது எங்கு ஒடுங்குகிறது?

5. ஆகாயம், அற்ப பஞ்சும் அந்தரத்தில் நிற்க இடம்பெறாமல் இருப்பவும் பூமியை நோக்குவதால், இப்பிரமாண்டமான அண்டம் வானஉருக்களுடன் அந்தரத்தில் நிற்பதற்கு ஆதாரங்கள் என்னை?

6. பேய் உண்டா இல்லையா?

7. உண்டானால், உற்பத்திக்குக் காரணங்கள் என்னை?

8. இல்லையானால், பொருளில்லாத சொல்லுண்டா?

9. சிருஷ்டிப்பொருள்களில் அவைகளும் ஒன்றுதானா?

10. துர்மரணங்களால் நேரிட்ட ஆவேசமென்பது உண்மைதானா?

11. அஃது ஆணா பெண்ணா அலியா?

12. அஃது வசிக்கும் இடம் எங்ஙனம்?

13. பெண்மக்களையே பின்பற்றுவதற்குக் காரணங்கள் என்னை?

14. எழுத வாசிக்கப் பேசவறியாத பெண்மக்கள், ஆங்கிலம் துலுக்கு முதலிய பாஷைகளைப்பேசுவதற்குக் காரணம் என்னை?

15. மேற்கண்டவைகளுக்கு விலக்குண்டா? உண்டானால், மந்திரமா அல்லது அவிழ்தமா?

சிதாகாஸன்.

ஓர் நகரிரவு.

A city-night piece (Gold·smith).

மணியிரண்டாயிற்று. அவியும் விளக்கின்வெளிச்சம் ஒருமிக்க வோங்குவதும் ஒருங்கே குறைவதுமாயிருக்கின்றது. பாராக்காரன் தூங்கிவிழுகின்றான். நேரம் தெரிகிறதில்லை. உழைப்பாளிகளும் சுகவாசிகளும் செவ்வனே உறங்குகிறார்கள். ஆழ்ந்தசிந்தையரும் பாதகரும் உண்டாடும் வெறியர்களும் எக்கம்பிடித்தவர்களுமல்லால், விழித்திருப்பார்வேறில்லை. வயிறு கொஞ்சம் குறையவே, குடியன் கையில் மறுபடியும் கோப்பை ஏறுகின்றது. கள்ளன் வெளிப் போந்து கொள்ளையிற்கண்ணைப்ச் சுற்றிவருகின்றான். ஆருயிர் வெறுத்தோன், தற்கொலைபுரிவான் துணிகின்றான்.

பண்டைபபுராணங்களையும் என்காலத்திய விவேகபானுக்களின் நவீன நூல்களையும் சற்று மூடிவைத்து நிமிஷத்துக்குநிமிஷம் உருமாற்றும் (வேஷதாரிகள்) வீணர்கள் சிறிதுநேரத்திற்கு முன்பு சென்றவழியில் தனியேசெல்வேன். ஓ! கூத்தெல்லாம் கனவுபோற் கழிய, அடிபுண்டகுழவி அழுதுறங்குவதுபோல், கருத்தழிந்து ஒய்ந்தீர்களோ?

இவ்வந்தகாரத்தை யென்னென்பாம்! விளக்கு அழுதுவழிகின்றது. கடிகாரம் டிக் டிக் என்பதும் ஊர்ப்புறத்தே காவல்நாய் ஒலமிடுவதுந்தவிர சப்தம் (பேரரவம்) பிறிதில்லை. மமதைகொண்ட கர்விகளின் ஆர்ப்பாட்டம் எங்கே? அறவே ஒழிந்ததுபோலும். இத்தகைய ஒரு மணிப்போழ்தே, 'நான்,' 'எனது' என்பதெல்லாம் வீண் மனோராஜ்யம் (பொய்த்தோற்றம்) என்பதைத் தெள்ளிதின் விளக்கும்.

இந்நிலையிலா நிசப்தாகாரம் (தனிமை) இவ்விடம் நிலைக்கும்? காலமும் போதரும். அக்காலம், மக்கள் நிறைந்தவித்தொந்நகரும் மாயவாழ்வைப்பொத்தே மக்கள் ஒழிய மணல்வெளியாகும்.

வெற்றியுமுவகையும் மிகைபடவெய்தி, திருஷ்டிக் குறைவால், அழிவிலவென்றும், என்னே யெங்கள் பெருமிதவாழ்க்கை! எனவும்பிதற்றிப்பேரிகை முழங்கிய, தன்னேரில்லாத் தலைநகரங்கள் எங்கே எங்கே? இருந்திலவென்றே இயம்பினும் பொருந்தும். பிறர் தம் அழிவுக்காற்றாதிரங்கி மனமிகவாடும் தேசம்திரிவோன், வந்திங்கலைந்துக் கண்ணுற்றிதனைப் "பொய்யே யாமிப்பூதலவாழ்க்கை" என்னும் ஞானம் பெற்றேகுகின்றான்.

அவன் கோட்டையிருந்த இடத்தில் கள்ளிமுளைத்திருக்கிறதே! ஆஸ்தானமண்டபமிருந்த அந்த இடம் இன்று பையாவிற்றுறைவிடம். ஆலயமும் அரங்கமேடையும் அதுவிதுவென அறியொணா வண்ணம் பாழ்த்துக் குவிந்துபோயினவே. அவர்கள் பாழாய்விட்டார்கள். அவர்கள் பேரும் போகமும் பேராசையும், அவர்கள் பலத்தை முதலில் ஒடுக்கின. வேடிக்கைக்காரத் துரைகளுக்குக் கபடமும் பரிசும். பொதுஜனப் பாட்டாளிகளுக்கில்லை. அவர்கள் செல்வம், பரிவிலரை 'வருக' வெனவழைத்தது. அவர்கள் தோற்றும் தோற்றும் பன்முறை மீண்டே முயற்சியால்வென்று காத்து நின்றவரைக் (உருவமில்லாது) கருவழித்துச்சென்றார் என்றே பேசி நிற்கின்றான்.

சிறிதுநேரத்திற்குமுன் ஜனங்கள் நிறைந்திருந்த இத்தெருக்களில் இப்பொழுது ஏன் சிலர்தான் காணப்படுகிறார்கள்? அதுவும் இப்பொழுது காணப்படுபவர்கள் பகல்வேஷக்காரர்களுமல்ல. பாவம்! அவர்கள் வறுமையையும் கஷ்டத்தையும் ஒளிப்பவருமல்ல. தெருத்தரையையே படுக்கையாகக்கொண்டு செல்வவான்களின் வாசலில் தம்வறுமைக்கு (அஞ்சி) ஒதுங்கும் இவர்கள் யார்? நாடோடிகளும் பஞ்சைபணாதைகளும் திக்கற்ற குழந்தைகளுமே! ஒருவரைநாடி உதவிகேட்கவும் நாவெழாத நிலையிலிருப்பவர்கள். இரக்கமுள்ளமனம் இவர்களைக்கண்டதும் ஏங்கிநிற்கும். இவர்கள் கஷ்டம் கண்டோர்மனதைக் கலக்கித்தேகத்தில் மயிர்க்கூச்சலுண்டாக்குகிறது. சிலர் உடுக்கக் கந்தையுமற்று பிறந்தமேனியுடனிருக்கி

ளூர்கள். பிணிகள் பிடுங்கித்தின்பதால், சிலர்தேகம் மெலிவுற்று எலும்புக்கூடாயிற்று. ஆதரிக்கக் கடமைப்பட்ட மாநிலமாந்தர்களாம் சகோதரர்கள், இவர்களைக் கைநழுவவிட்டார்கள். இவர்கள் பாவம் திகம்பரராய்த் திரிகின்றூர்கள். பசிப்பேய் இவர்களைப் பிடித்துண்கின்றது.

குளிரின்கொடுமையால் நடுநடுங்கி உதறிக்கொண்டுநிற்கும் இவ்வபலைகளுக்கும் நற்காலம் இருந்தது. 'கட்டழகி' என்றும் 'அப்ஸரஸ்' என்றும் முகஸ்துதி செய்யப்பட்டகாலமும் இருந்தது. இப்பொழுதோ, கர்மாந்தகாரக்கடலில் தள்ளிய சண்டாளனும் குளிரின் கொடுமையையுங்காட்ட இப்பேதைகளைத் தெருவோடலையவிட்டான். வாழ்வைப் பாழ்படுத்திய காதகன் வாசலில் கண்ணீர்வடிக்கின்றனன். அவன்கன்னெஞ்சம் உருகுவதில்லை. கற்பைக்கொலைசெய்தபாவியின்வாயில் ஓர் இன்சொலில்லை. நாவில் புற்றும் மிளவையுமுண்டாகத் திட்டிபனுப்புகின்றூன். உதவி புரிவதில்லை.

துன்புறுவோரைக்கண்டும் அவர் இடர்தீர்க்கவியலாது நிற்கத்தானோ, நான் மனிதனுய்ப்பிறந்தேன். நிற்க நிழலற்றவர்களே! உலகம் உங்களைத் (தூற்றித்திட்டித்) துரத்துமேயல்லாது அழைத்து அணைப்பதில்லை. செல்வவந்தர்களுக்குக் கடுகளவு கஷ்டம்வந்தபோதிலும், பேச்சாளிகளால் மலையாக்கப்பட்டு, எங்கும் இதேவார்த்தை முழங்க ஊரெல்லாம் அவர்களைத்தேற்ற விரைந்தேகும். ஏழைகள் மகத்தான கஷ்டங்களால் வதைக்கப்பட்டு ஆற்றொணுத்துயரத்தால் கதறினுலுங்கூட, இவர்கள் அழுங்குரல் அண்டைவீட்டுக்காரன் செவியிற்கூட ஏறுவதில்லை. மித்ரனைப்போன்றுதவ ஏற்பட்ட சட்டங்களும் இவர்களுக்குச் சத்துருவாகின்றன.

ஈசனே! எளியர்க்காகவிரங்கும் மனத்தைக்கொடுத்த நீ, அவர் தீதுதீர்த்தற்கேதுவாய தனத்தைக் கொடுத்தாயில்லை. எளியர்பாலிரங்கும் ஏழைநெஞ்சத்தவன், உதவ வகையிலனுயின், அந்தோ! அவனது இரக்கம் அவனைத்துன்புறும் ஏழையாரைவிட அதிகமாகப் பரிதவிக்கச்செய்கின்றதேயன்றி வேறென்ன! **N. N. ராஜன்.**

லலிதாம்பாள்.

காற்று சில்லென்று அடித்துக்கொண்டிருக்கிறது. கதிரவன் தன்னுடைய ஒளியைக் காட்டவா வேண்டாமா என்ற எண்ணத்துடன் அனுப்பியதுபோல், முதலில் சுக்கிரன் உதயமானான். பின்னால் தன்னுடைய பிரகாசமான கிரணங்களை வீசிக்கொண்டு சூரியன் வெளிவருகின்றான். வரும்போது ஜனங்களுக்குக் குளிரைக் கொடுத்துக்கொண்டிருந்த பனி, குளிர்ந்தகாற்று முதலானவைகளைத் தன்னுடைய கிரணங்களாகிய சைனியங்களுக்கு முன் சிதறியோட மனிதர்களுக்குச் சந்தோஷத்தைக் கொடுத்துக் கொண்டு வெளிவருகின்றான். உழவர்கள் உழுதுகொண்டும், கூலியாட்கள் நிலங்களைக் கொத்திக்கொண்டும், வெட்டிக்கொண்டும், குழந்தைகளும் கிழவர்களும் வெயிலில் குளிர்காய்ந்துக்கொண்டும் இருக்கிறார்கள்.

அப்போது இரண்டு பெண்மணிகள் அடியில்வருமாறு சம்பாஷித்துக்கொண்டு ஆற்றங்கரையில் பல்துலக்கிக்கொண்டிருந்தார்கள்.

"ஏண்டி! லலிதா!! இன்னும் ஒருமாதத்திற்குத்தானே உன் அப்பாவிடத்தில் இருந்துகொண்டும் இந்த ஆற்றில் பல்தேய்த்துக் கொண்டுமிருப்பாய்?"

"ஏன்! நான் அதற்கப்புறம் எங்கேபோகிறேன்? என்னுடைய அப்பா, இப்போது என்னைக்கும்பகோணம் போகவேண்டாமென்று சொல்லியிருக்கிறார். ஆதலால், நான் போகப்போகிறதில்லை. நான் இங்கேதானிருப்பேன்."

"நீ போவானேன்? இன்னும் ஒருமாதமோ, இரண்டுமாதமோ, அதற்குள் சுந்தரம் வந்து உன்னை அழைத்துக்கொண்டுபோகிறான்."

"யார் என்னை அழைத்துக்கொண்டுபோகிறாள்? அவனுக்கு இங்கு என்னவேலை? என்னடி! ராஜலெட்சுமி! அடிக்குப்பயந்து கொண்டு உளறுகிறாய்.

"என்னமோ அம்மா! நான் சொன்னால் உளறுகிறதுபோல்தானிருக்கும். உன் அம்மாவைக்கேள்; அவர்கள் சொன்னால் உனக்கு ரொம்ப சந்தோஷமாயிருக்கும். அப்புறம் நீ என்னிடம் "நீ சொன்னது நிஜம்தான்" என்று சொல்லுவாய்."

"உன்னைவிட என் அம்மா உயரத்திலும் வயதிலும் உயர்ந்தவளேதவிர வேறொன்றிலும் உயர்ந்தவளில்லை. நீதான்சொல்லேன், கேட்கிறேன்."

"உனக்கு இந்தவருஷம்.................."

இதற்குள் லலிதா தாயார் லலிதாவைக் கூப்பிடவந்துவிட்டாள். பிறகு இருவரும் சாப்பாட்டிற்குச்சென்றார்கள். லலிதா தன் வீட்டையடைந்ததும் ராஜலெட்சுமியைப்பார்த்து, "நீ எனக்குமுன்னால் சாப்பிட்டுவிட்டால் என் அகத்துக்கு வா; நான் சாப்பிட்டுவிட்டால் உன் அகத்துக்கு வருகிறேன்" என்று சொல்லிவிட்டு உள்சென்றாள். லலிதாவீட்டிற்குத் தயிர்க்காரன்வர நேரம் ஆய்விட்டதால், சாப்பிட்டாவதற்குமுன்னால், போஜனம்செய்துவிட்டு ராஜலெட்சுமி லலிதாவின் சமைபல்உள்ளைச் சார்ந்தாள். லலிதா சாப்பிட்டுக்கொண்டிருந்தாள். "மாமி! உங்கள் ஆத்தில் என்னஊறுகாய்? கிடாரங்காயா?"

"உன் அகத்தில் என்ன?"

"என் அகத்தில் எலுமிச்சங்காய் ஊறுகாய்போட்டுக்கொண்டு, தயிர் நிறையப் போட்டுக்கொண்டு சாப்பிட்டுவிட்டு வந்துவிட்டேன். இன்றைக்கு எத்தனைநேரம் வேணுமென்றாலும் கட்டம் ஆடலாம். தாசில்தார்பெண்ணே! ஏனோ சாதம் கொஞ்சமாகச் சாப்பிடுகிறாய்?"

"உங்களைப்போல் மடிவிழுப்புப்பாராமல் ஊறுகாயை ஸ்நானம் பண்ணுவதற்குமுன் தொடமாட்டோம். உன் அப்பா கிராமத்திற்

குப்போய்விடுவார். திரும்பிவருவதற்கு 1 மணி ஆகுமென்று வயிறுநிறைய சாதம்போட்டாள் உங்கள் தாயார். 10 மணிக்கு எங்க அப்பா கச்சேரிக்குப்போவதால், நான் கொஞ்சமாக இப்போது சாப்பிட்டால் போரும்."

"அப்போது காபி சாப்பிடுகிறதுதானே?"

"காபியா? வேண்டாம். என் அப்பாவே இப்போது காபியை விட்டுவிட்டார். காபி உதவாது."

"இங்கே காபிசாப்பிட்டால், சுந்தரம் ஆத்தில் காபி ஏது?"

"சரி போரும்" என்று லலிதா, இந்தப்பேச்சைக்கேட்க இஷ்டம் இல்லாதவள்போலவும், சாதம் போரும் என்று சொன்னவள் போலவும், 'ச்லேடையாகச் சொல்லிவிட்டுக் கைகளைக்கழுவிவிட்டு ராஜலெட்சுமியுடன் தோட்டத்திற்குச்சென்றாள்.

"ஏண்டி! ராஜம்! நான் சாப்பிடும்போது ஏதோ கலியாணம் என்றாய். காலையில் காவிரியில் இந்தவருஷம்...............என்று ஆரம்பித்தாய். அவைகளைப்பற்றி விவரமாகச்சொல்லு."

"மலிந்தால் கடைக்குவரும் என்பதுபோல" நீயே கேட்கிறாய் பார்த்தாயா? உனக்கு இந்தவருஷம் நிச்சியம் கலியாணம் நடக்கப் போகிறதாம். உன் அம்மா உன்னை அவன் தம்பி சுந்தரத்துக்குக் கொடுக்கணும் என்கிறாள். உன் தகப்பனர் சுப்பிரமணியனுக்கு கொடுக்கணும் என்கிறார். உனக்கு யாரைப்பண்ணிக்க ஆசையிருக்கிறது. அத்தை பிள்ளையையா அல்லது மாமாவையா?"

லலிதா நிரம்ப புத்திசாலியானதாலும், ஆழ்ந்த யோசனையுள்ளவளானதாலும், தன் கணவனுடன் வெகுநாள் இருந்து வசிக்க வேண்டியவளாதலாலும், தான் நல்லகணவனைக் கலியாணம்செய்துகொள்ளவேண்டும் என்று ஆசையுள்ளவளாதலாலும் சற்று யோசிக்கலானாள்.

"என்னடி! ஜட்ஜ் தீர்ப்புச்சொல்ல யோசிப்பதுபோல யோசிக்கிறாய்!!"

லலிதா, ராஜலெட்சுமியின்மேல் ரொம்ப பிரியமுள்ளவளாதலா லும், நம்பிக்கையுள்ளவளாதலாலும் தன்மனதில் உள்ளவைகளை ஒளியாமல்சொல்ல வாயெடுத்தாள்.

"என்ன! லலிதா!! மாமாதானே?"

"கோபிக்காதே ராஜம்! ஜட்ஜ் தீர்ப்புச் சட்டெனச்சொல்லிவிட லாம். இத்தீர்ப்புச் சொல்லுவதற்கு நன்றாய் யோசிக்கவேண்டும். கலியாணமென்றால் இலேசல்ல. நாம், நாம் கலியாணம் செய்து கொள்ளுகிற கணவனுடன் நம்முடைய ஆயசு முழுவதும் செலுத் தவேண்டும். நமக்கு ஆசையில்லாக்கணவனை நாம் வரித்துக் கொண்டால், இல்லறம் ஒழுங்காக நடக்குமா? ஒரு வலுத்த காளை யையும் ஒரு சிறிய ஆட்டுக்குட்டியையும் ஒரு ஏரில் கட்டினால் ஒழுங்காகப்போகுமா? கலியாணம்செய்துகொண்டால் நாமும் கண வனும் ஒத்துப் பாலும் நீரும் இருப்பதுபோல இருக்கவேண்டும். சுந்தரத்தைக் கலியாணம்செய்துகொண்டால், இல்லறம் ஒழுங்காக நடத்தமுடியாது. அவன் பெயர் சுந்தரமே ஒழிய, அவன் சுந்தர மில்லை. அறிவென்பது அவனிடம் மருந்துக்குக்கூட கொஞ்சமும் கிடைக்காது. படிக்கிறது ராமாயணம் இடிக்கிறது பெருமாள் கோவில் என்பதுபோல, வாசிப்பது அத்தியயனம் ஆடுவது சீட்டு சதுரங்கம். வாணக்குழாய்க்கு மருந்து கிடிப்பதுபோலப் பொடி போடுவானும். கன்னிகையாயிருந்தாலும் இருப்பேன் சுந்தரன் எனக்கு வேண்டாம்.

"ஆனல் தாயார்சொல்படிக் கேட்கவேண்டாமா?"

"அன்னையும் பிதாவும் முன்னறிதெய்வம்' என்று சொல்லி யிருக்கிறது. ஆனல், தாயார், செய்யக்கூடியகாரியத்தைச் செய்யச் சொன்னல் செய்யலாமே ஒழிய, தெருவில்போகும் மடையனைக் கலியாணம் செய்துகொள்ளச்சொன்னல் என்னமாய்ச் செய்துகொள் ளுவது? முன்னாட்களில் பெண்கள் கணவர்களைத்தாமே வரித்துக் கொள்ளுவது வழக்கம். உதாரணமாக, தமயந்தி சகுந்தலை முதலி

யவர்கள். அப்படியில்லாமல் இப்போதுங்கூடப் பெற்றோர்கள் பிள்ளைகள் பார்ப்பது என்பதிலும், நல்லவர்களாகவும் புத்திசாலிகளாகவும் அழகாகவும் பெண்களுக்குத்தகுந்த கணவர்களாகவும் இல்லாதுபோனால், பெண்கள் கலியாணம் செய்துக்கொள்ளமாட்டார்கள்."

"சரி! உன் அத்தைபிள்ளைதான்; அப்போது நீ சொல்வது சரிதான். நீ அத்தைபிள்ளையைப் பண்ணிக்கொண்டுவிடு."

"என் அம்மா பொல்லாதவள். தான் சொல்லியபடி அப்பா கேட்காதுபோனால், கத்துவாள் திட்டுவாள் கிணற்றில் விழுகிறேன் என்பாள். அதற்காக என் அப்பா அவள்சொல்படித்தான் கேட்பார்."

"வேடிக்கைதான். 10 நாள் முன்னால், சேஷிஅம்மாள் இப்படித்தான், "கிணத்தில் விழுவேன் கிணத்தில் விழுவேன்" என்று தன் புருஷனிடம் சொன்னாள். அவருக்குக்கோபம் வந்துவிட்டது. "நீ விழுகிறதென்ன நானே தள்ளுகிறேன்" என்று கையைப்பிடித்து இழுத்துக் கிணற்றைநோக்கிச்சென்றார். "இனிமேல் சொல்லவில்லை" என்று கதறினாள். அதைப்போல்செய்ய உங்கள் அப்பாவுக்குத் திறமையில்லை. ஆனால் நீ அவருக்கு ஒரே பெண்ணாதலால் அவர் உன்னை B. A. பிபாஸ்பண்ணின பையனுக்குத்தான் கொடுப்பார். அப்படியில்லாதபோனால், உன் அத்தை பிள்ளை சுப்பிரமணியனுக்குத்தான் கொடுப்பார். அவன் என்ன சிகுத்பாரமா?—அது என்ன வாயில் நுழைகிறதா?—வாசிக்கிறான். அவனைத்தான்........"

"இதைக்கேட்டதும் லலிதாவுக்குத் தன்னையறியாமலே தலை அசைந்தது."

"உன் ஆத்துக்காரர் எங்கே இருக்கிறார்?"

"என்னடி! பரிகாசம்பண்ணுகிறாய். இரு; யாரோ கூப்பிடுகிறாப்போல் இருக்கிறது. சேவகன்போல இருக்கிறது. வா, போவோம். மணி 11 ஆய்விட்டது. பேசிக்கொண்டே இருந்துவிட்

டோம்." என்று சொல்லிவிட்டு லலிதா சேவகனுடன் வீடுசென்றாள்.

அவள் தாயார், "11 மணிக்குத்தான் தோட்டத்துக்குப் போகிறது. உன் அப்பா, 'குழந்தை மூஞ்சி மறந்துபோய்விட்டது.' என்று இத்தனை நாழி காத்துக்கொண்டிருந்துவிட்டு இப்போதுதான் கச்சேரிக்குப்போகிறார். குளித்துவிட்டுச் சாப்பிட வா." என்றுக் கடுமையாகக் கனக்க கோபித்துக்கொண்டாள். (தொடரும்)

வெங்கடரமணன்.

பெய்யெனப் பெய்யச்செய்தல். ஓர் அற்புத யந்திரம்.

ஐரோப்பாவில் ஓர் பூததத்துவசாஸ்திரி நாம் நினைத்தமாத்திரத்தில் மழையை உண்டாக்கக்கூடிய ஓர் கருவியைக் கண்டுபிடிக்கவேண்டுமென்று வெகுகாலங்கஷ்டப்பட்டு சமீபத்தில், அதற்கு அனுகுணமான ஓர் மின்சார யந்திரத்தைக் கண்டுபிடித்திருக்கிறார். இந்த யந்திரத்தை எந்த இடத்தில் வைத்து இயக்குகின்றோமோ அந்தப்பிரதேசத்தில் குறித்த தூரத்திற்குள் இருக்கும் மேகக்கூட்டங்களெல்லாம் அந்த யந்திரத்திற்கு நேரேவந்து சேருகின்றனவாம். யந்திரம் இயங்கிக்கொண்டிருக்கும்வரையில் மேகங்கள் அப்புறம் போகமுடியாது. இப்படி மேகங்களை வேண்டியவிடத்தில் கூட்டக்கூடியபின், இனி அம்மேகங்களை ஜலமாக மாற்றவேண்டிய ஏற்பாடுகளைச் செய்துகொண்டிருக்கிறார்.

இன்னம் கொஞ்சகாலத்தில் அந்த யந்திரத்தைக்கொண்டே நாம் நினைத்தஇடத்தில் மழைபெய்யச்செய்ய முடியுமென்றும், அதன்பின் மழையில்லாக்குறையால் க்ஷாமமென்பதே இருக்கமுடியாதென்றும் இவர் அபிப்பிராயப்படுகிறார்.

என்னே கடவுட்டன்மை! ஈதன்றோ கடவுளின் மகிமையைக் கண்டுபிடிப்பதாகும். இந்தியர்களாகிய நாம் இத்தகைய காரியங்கள் எவ்வளவு செய்திருக்கிறோம். மெஸ்மெரிஸம் எங்களுடையதென்றும், ஆகாயக்கப்பல், எங்கள் புஷ்பகவிமானமென்றும் மற்றும் உலகத்திலுள்ள வித்தைகளெல்லாம் எங்கள் முன்னோர்கள் கண்டுபிடித்ததென்றும், வாயால்மட்டும் சொல்லித்திரிவதால் வருவதென்ன. இனிமேலாவது இந்த வீணபெருமையைவிட்டு இந்தியரும் இத்தகைய அற்புதச்செயல்களைக் காரியத்திற்காட்ட கடவுள் இன்னருள்புரிவாரோ!

தமிழர் கூட்டம்.

"இந்தியாவில் வசிக்கும் கோடிக்கணக்கான ஜனங்கள் பல ஜாதி ஜனங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தபோதிலும், ஒவ்வொரு ஜாதி ஜனங்களும் தங்களுக்குள்ளேயே கட்டுப்பாடும் கல்வி செல்வம் முதலியவைகளும் உண்டாகவேண்டுமென்றும், இந்திய ஜனங்களனைவரும் ஒருஜனமாய்த்திரண்டு அமையவேண்டுமென்றும் விரும்பி இந்த விருப்பப்படி அநேகமாய் முயற்சிகள் செய்துவருகிறார்கள்.

இதற் உதாரணமாகவே, நேற்று காயஸ்த கத்திரி சீக்கிய ஆந்திர கான்பரன்ஸுகள் நடந்துவருகிறதைக் குறிப்பிட்டோம். ஆந்திர ஜனங்கள் சென்னைமாகாணத்தில் வசிக்கும் 4 கோடி ஜனங்களுள் அடங்கினவர்கள். இவர்களைத் தமிழரும் மற்றத் திராவிட ஜனங்களும் தெலுங்கரென்று சொல்லுவார்கள். நமது மாகாணத்தில் வடக்கேயுள்ள பனிரண்டு ஜில்லாக்கள் இந்தஜாதியாரைக் கொண்டவை. இவைகளில் 1,70,00,000 ஜனங்கள் இருக்கிறார்கள். இவர்களில் ஆங்கிலங்கற்ற வகுப்பாருக்கு ஒரு புது ஆசை உண்டாயிருக்கிறது. தமிழ் ஜனங்களின் நிலைமையைவிட தெலுங்கு ஜனங்களின் நிலைமை பிற்பட்டிருக்கிறதென்றும், அவர்கள் தனியான ஜனக்கூட்டமாக அமைந்து கவர்ன்மெண்டும் தனியாய் உண்டாகி பீஹார்மாகாணத்தைப்போல் தனியான மாகாணத்தினராய் நிர்வஹிக்கப்படுவார்களானால், தங்களுடைய நிலைமை சீர்பெற்று உயர்ந்து விளங்குமென்றும் அவர்கள் கருதுகிறார்கள்.

இந்த ஆசையை நிறைவேற்றும்பொருட்டு ஆங்கிலங்கற்றவர்கள் அங்கங்கே பலவிடங்களிலும்போய்ப் பிரசங்கங்கள் செய்வதும், துண்டுப்பத்திரிகைகள் பிரசுரிப்பதும், சமாசாரப் பத்திரிகைகளில் எழுதுவதும், இவைகளைத்தவிர வருஷாவருஷம் கான்பரன்ஸ் கூடுவதுமாய்ப் பலவழிகளிலும் முயற்சிசெய்து வருகிறார்கள். இவர்களுக்கும், இவர்களின் முயற்சியால் தெலுங்குஜனங்கள் அனைவருக்

கும, தெலுங்குபாஷையை அபிவ்ருத்திசெய்வதில் பரபரப்பு உண்டாயிருக்கிறது. இந்த அபிவ்ருத்தியின்பொருட்டு தெலுங்குச்சங்கம் ஒன்று, மதுரைத் தமிழ்ச்சங்கத்தைப்போல், ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றது. புதிதுபுதிதாக அநேக தெலுங்குப்புஸ்தகங்கள் பிரசுரம் செய்யப்பட்டுவருகின்றன. ஸ்திரீகளும் புருஷரைப்போல் உயர்ந்த கல்விகற்று சங்கங்கள் ஸ்தாபித்துக்கொண்டு, மீட்டிங்கு கூடிப்பேசுவதும், பத்திரிகைகள் பிரசுரம் செய்வதுமாயிருக்கிறார்கள்.

ஆங்கிலங்கற்ற தமிழர், தமிழ்ப்பாஷையில் பேசவாவது எழுதவாவது சக்தியற்றிருக்க, ஆங்கிலங்கற்ற தெலுங்கரோ, தெலுங்குப்பாஷையில் வெகு திறமையுடனும், கிளர்ச்சியுண்டாகும்படியாகவும் பேசவல்லவர்களாயிருக்கிறார்கள். தமிழ் ஜனங்களைப் போல் தெலுங்குஜனங்கள் பகட்டும் வெளித்தோற்றமும் இல்லாதவர்களானாலும், தங்கள் தேசத்திலும் பாஷையிலும் ஆழ்ந்த அபிமானம் வகித்து, பரபரப்புடன் முன்னுக்கு வந்துகொண்டிருக்கிறார்கள். இப்போதிருக்கிற நிலைமையிலேயே தமிழர் இருப்பார்களானால், சில தினங்களுக்குள்ளாகத் தமிழர் அடங்கிப்போய் தெலுங்கர் முந்திவிடுவார்கள்.

ஆந்திரா கான்ப்ரன்ஸ் இரண்டாந்தடவையாக பெஜவாடாவில் சிலதினங்களுக்குமுன்னுகக் கூடிற்று. காங்க்ரஸ் மஹா ஸபையைப்போல் அலங்காரமான பந்தலில், பழையகாலத்துத் தெலுங்கு அரசர் தெலுங்குப்பெரியோர் இவர்களுடைய படங்களும், தெலுங்கரின் பெருமையைக்காட்டும் வேறு பல விருதுகளும் சூழ்ந்து விளங்க, ஆயிரக்கணக்கான தெலுங்குஜனங்கள் கூடினார்கள். மிஸ்டர் **N.** சுப்பராவ் பந்துலுகாரு பிரசிடெண்டாயிருக்க, மசூலிப்பட்டணம், ராவ் பகதூர், **P.** வேங்கடப்பய்யகாரு உபசாரணைக்கமிட்டி சேர்மனுயிருந்து, கான்ப்ரன்ஸுக்கு வந்த ஜனங்களை உபசரித்து ஏற்றனர். பிரசிடெண்டு தம் பிரசங்கத்தைத் தெலுங்கில் படித்தபடியால், அது வெளியாகவில்லை. மிஸ்டர் வெங்கடப்பய்யா பேசி

னதில், தெலுங்குஜனங்களுக்கு மேற்கண்டவாறு புது ஆசை பிறந்திருப்பது சரியென்றும், அவசியமென்றும், அதனால் மற்ற இந்திய ஜனங்களுடன் சௌஜன்யக்குறைவு உண்டாகுமென்பது பொருளல்லவென்றும், எப்படி சரீரத்தில் பற்பல அவயவங்கள் தனிமையே வன்மைபெற்றால், சரீரம் முழுதும் வன்மைபெறுமோ, அப்படி ஒரு சமூகத்தில் ஒவ்வொரு பாகமும் திடம்பெறும்போது, சமூகம் முழுமையும் திடம்பெற ஹேது உண்டாகுமென்றும் பேசினார். தெலுங்குஜனங்கள் தனியான சமூகமாகத் தனியாய் நிர்வஹிக்கப்படவேண்டுமென்று வாதிப்பார்களானால், அவ்வாறே தமிழர் மலையாளத்தார் மஹாராஷ்டிரர் முதலான வேறு ஜாதியார்களும் தனியான கவர்ண்மெண்டு வேண்டுமென்று கேட்பார்கள் என்பதற்கு மிஸ்டர் வெங்கடப்பப்பா சொன்ன பதில் என்னவெனில், "கேட்கட்டுமே, இந்தியா முழுமையும் பாஷையை ஆதாரமாகக்கொண்ட தனித்தனி மாகாணமாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு மாகாணமும் சுவாதீனமாக ஆளப்பட, எல்லா மாகாணங்களுஞ்சேர்ந்து, இந்தியாவென்ற பொதுக்கவர்ண்மெண்டைத் தாங்கிவரவேண்டும்! ஆகவே இந்தியா அமெரிக்காவிலுள்ள யுனைடெட்ஸ்டேட்ஸைப் போல ஒரு பிடரல் கவர்ண்மெண்டால் ஆளப்படவேண்டும்; இதுவே காங்கிரஸ் மஹாஸபையில் தேசாபிமானிகளின் நோக்கம். 1911-வரு ஆகஸ்டு-மீ இந்தியா கவர்ண்மெண்டு இந்தியா செக்ரிடரிக்கு எழுதின நிருபத்தில், இதேமாதிரி பிடரல் கவர்ண்மெண்டை சூசிப்பித்திருக்கிறார்கள்; ஆந்திர ஜனங்களினுடைய நோக்கமும் இதுதான்." இப்படி மிஸ்டர் வெங்கடப்பப்பா பேசினார்.

இப்படிப் பேசினதற்கு இசைய கான்பரன்ஸில் பல தீர்மானங்கள் செய்யப்பட்டன. தனிமையான கவர்ண்மெண்டும் தனிமையான யூனிவர்ஸிடியும் வேண்டுமென்ற பிரச்னை சம்பந்தமாய்மட்டும் அபிப்பிராயபேதம் இருந்தது. இளைஞர் இவைகள் வேண்டுமென்று வாதிக்க, அநுபோகஸ்தரான பெரியோர், இந்தவிஷயத்தில் தெலுங்குஜனங்களின் அபிப்பிராயம் முதிரவில்லையாகையால், அதை

அடுத்தவருஷம் கவனிக்கலாமென்று வாதித்தார்கள். தொழில் வியாபார ஸ்தானங்கள் விஷயமாயும், 'டீச்சர்காலேஜ்' விஷயமாயும், ஸீடட் டிஸ்டிரிக்டில் ஒரு 'ஆர்ட்ஸ் காலேஜ்' விஷயமாயும், ஜனங்களின் வேண்டுகோளுக்குக் கவர்ன்மெண்டு அநுகூலமாயிருப்பது சந்தோஷமென்றும், பின்வருகிற ஸ்தாபனங்கள் தாமதமில்லாமல் தெலுங்கு ஜில்லாக்களில் ஸ்தாபிக்கப்படவேண்டுமென்றும், தீர்மானங்கள் செய்யப்பட்டன. தெலுங்கு ஜில்லாக்களாகிய சித்தூரிலும் நெல்லூரிலும் ஒரு 'ஆர்ட்ஸ் காலேஜும்,' இந்த ஜில்லாக்களில் பெண்களுக்காக வேறு இரண்டு 'ஹைஸ்கூல்களும்,' எஞ்சினியரிங் வைத்தியம், விவசாயம் ஆகிய காலேஜுகளும், 'எலக்ட்ரிகல் எஞ்சினியரிங்' ஸ்கூலும், ஆயுர்வேத வைத்தியசாலையும், தெலுங்கு ஜில்லாக்களில் சில ஜனங்கள் பிற்பட்ட நிலையில் இருக்கிறபடியால், அவர்கள் முன்னுக்குவர சகல வசதிகளும் உடனேவேண்டுமென்று தீர்மானங்கள் செய்யப்பட்டன. தெலுங்கு ஜனங்களின் ஆசை பிரமாதமாயிருக்கிறபடியால், அது நிறைவேறச் சிலகாலம் பிடிக்கும். அதற்குள்ளாக இந்தியாவில் என்ன மாறுதல்கள் நேரிடுமோ யார் சொல்வார்கள்." என்று சுதேச மித்திரனில் இந்த வருஷம் ஏப்ரல்-மீ 16-உ பத்திரிகையின் நான்காவது பக்கத்தில் ஆந்திரர் கான்ப்ரன்ஸ் என்னும் தலைப்பின்கீழ் எழுதப்பட்டிருக்கிறது.

இப்படியிருக்கிறது தெலுங்கருடைய ஆசையும் ஆவேசமும். இப்படியே இதர வடநாட்டார்களுக்கும் நோக்கம். எல்லாரும் முன்னுக்குக் கால்களை எடுத்துவைத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆயின் நந்தமிழ்நாட்டு ஜனங்களுக்கு ஒருமித்தநோக்கம் அப்படியுண்டாகாமல் இருப்பதற்குத் துக்கிக்கவேண்டியிருக்கிறது.

நந்தமிழ்நாட்டில் பிறந்து வளர்பவர்கள் பல பாஷை பேசப்பட்டவர்களாக இருப்பினும், இந்த ஜனங்களை இப்போது இருக்கிறபடிப் பெரும் பிரிவினர்களாகப் பிரித்துப்பார்த்தால், மூன்று பெரும்பிரி

வினர்கள் நமக்குப் புலனாகிறார்கள். இம்மூன்று பிரிவினரும், இந்நாட்டிலேயே வளர்ந்து இந்நாட்டுப்பாஷையாகிய தமிழையே பேசக்கூடியவர்கள். அவராவார், ஆரியத்தமிழர் ஆங்கிலத்தமிழர் தனித்தமிழர் என்பார்.

இவர்களுள் ஆரியத்தமிழராவார், இந்நாட்டிலேயே பிறந்து வளர்ந்து தமிழே பேசுபவர்கள். ஆனால் ஆரியம் (ஸம்ஸ்க்ருதம்) படித்தவர்கள். இவர்கள் தாங்கள் படித்திருக்கும் ஆரியத்தின் மேல்வைத்த அன்பின் முதிர்ச்சியால் தமிழ்ப்பாஷையில் வெறுப்பும் அது படித்தாரிடம் எளிமை பாராட்டுதலும் இவ்விரண்டும் முதிர்ச்சியால் இந்நாட்டினைப்பற்றிய கவனம் செலுத்த முன்வாராமையும் காட்டுகின்றனர். இவர்கள் பெரும்பாலும் பிராமணவகுப்பையே சேர்ந்தவர்களாயிருக்கிறார்கள். இரண்டாவது ஆங்கிலத்தமிழரோவெனின், இந்நாட்டிற் பிறந்து வளர்ந்தவராயினும், தாம் உதர நிமித்தத்துக்காகப்படித்த ஆங்கிலத்தில் (இங்கிலீஷில்) ஒரு சார்பான அன்பைச் செலுத்தி அதற்கு வசப்பட்டு, தமது தாய்ப்பாஷையாகிய தமிழைப் பாஷையென்று சொல்லவும் நாணுட்கொண்டவர்களாக ப்ளடி டமில் (Bloody Tamil) என்று அதனை இகழ்ந்து அதனைக்குறித்துப் பேசவும் வெறுத்து, அதே காரணமாக நாட்டு ஏழை ஜனங்களிடத்தில் வெறுப்பும் காட்டுகிறவர்கள். ஏனெனில், நாகரிகமில்லாத ஏழைகளுக்குப்போதிக்க, அவர்களது பாஷையாகிய தமிழில் பேசவோ இவர்க்குத்திறமையில்லை. தாங்கள் படித்த பாஷையாகிய இங்கிலீஷில் பேசினாலோ அந்த ஏழைகளுக்குத் தெரிகிறதில்லை. இதனால் வெறுப்பும் வெட்கமும் அவஸ்தையும் அடைகிறார்கள். இதனைக்கண்கூடாகச்சமீபத்தில் தென்னாப்பிரிக்கா விஷயமாகநடந்த சிலகூட்டங்களில் நான் பார்த்தேன். இவர்களில் பிராமணருமுண்டு; இதரருமுண்டு. மூன்றாவதான தனித்தமிழரோ. இந்நாட்டில் பிறந்து வளர்ந்து அந்தத்தமிழையே படித்தவராயினும், நாட்டின் மேல்நோக்கையும் நாகரிக முதிர்ச்சியையும் இன்னதென்று கவனியாதவர்கள். இவர்களிலும் பிராமணருமுண்டு இதரருமுண்டு. வெரு

வாய் தமிழ்ப் பண்டிதர்களாகவே இருக்கிறார்கள். இவர்களில் நல்ல படிப்பும் முதிர்ந்த அனுபவமும் கூடினவர்களால் கூட்டப்பட்ட பெரிய சபைகளிலும், பல வித்வான்கள் பலநாள் கூட்டங்கூடிப் பெரும் பணச்செலவு செய்தாலும், பழங்கதைகளைத் திருப்பித் திருப்பிச் சொல்வதாக முடிகிறதேயல்லாமல்; நம் நாட்டுக்குத் தற்காலம் வேண்டியதென்ன? அதனை எவ்வாறு முடிக்காலம்? என்ற யோசனை உண்டானதாகத் தெரியவில்லை. இது சமீபத்தில், புதுக்கோட்டை சமஸ்தானத்தைச் சேர்ந்த மேச்சேவல்பட்டியின் ஸன்மார்க்க ஸங்கத்தின் ஐந்தாவது வருஷக்கொண்டாட்டத்தைக் கவனித்தார்க்கு நன்றாகத்தெரியும். அந்தக் கூட்டத்தில் நல்லபடிப்புள்ளவர்கள் சுமார் 30 பண்டிதர்கள் கூடியிருந்தார்களெனத் தெரிகிறது. சபை மூன்று நாட்களும் பழங்கதைப் பேச்சாகவே முடிந்தது. இதனை 'சுதேச மித்திரன்,' 25–4–14 பத்திரிகையின் நான்காவதுபக்கத்தில் பரக்கக்காணலாம். இதனைப்போலவே இன்னும் பலவிடங்களிலும் இம்மாதிரி சங்கங்கள் கூட்டப்படுகின்றனவென்றும், தற்கால இந்தியாவுக்கு வேண்டியவற்றைத் தேடக் கூடிய விஷயமொன்றாவது பிரஸ்தாபிக்காததைப்பற்றித் துக்கிக்கவேண்டி நேருகிறது.

இதில், ஆரியத்தமிழர் தனித்தமிழர் ஆகிய இவர்களுள் பெரும்பாலருக்கு நாட்டின் தற்கால நிலைமையில் கவனம் செலுத்தும் பழக்கமுண்டாகவில்லை. ஏனெனில், அவர்கட்கு ஆழ்ந்தபடிப்பு இருப்பினும், அப்படிப்பு பழம்படிப்பாகவே முடிந்து, தாம் படித்தபடியே பழங்காலப்பெருமையைச் சொல்லிச் சொல்லிக் கொட்டாவி விட்டுக்கொண்டிருக்கிறார்கள். கிணற்றுத்தவளைகள் போலவே தாம் படித்தறிந்ததே முடிவான உயர்ந்த படிப்பென்று எண்ணி வாதிட்டுக்கொண்டு இருக்கிறார்கள். ஆனால், நமது நாட்டு ஏழைஜனங்கட்குத்துணையாகக்கூடியவர், நாம் இரண்டாவதாகச் சொல்லிவந்த ஆங்கிலத்தமிழரேயாவர். ஏனெனில் இவர்கட்கு இந்தியாவின் தற்கால நிலைமை நன்றாகத்தெரிந்திருக்கிறது. தவிர, ஆங்கிலபாஷை

யின் உதவியால் பல பத்திரிகைகளிலிருந்து, நம் தேசத்துத் தற்கால இருப்பையும் அதற்கு சிகிச்சையையும் தெரிந்துகொண்டிருக்கிறார்கள். இவர்கள் முன்னுக்குவந்து கிராமந்தோறும் சங்கங்கூட்டி, ஆரியத்தமிழர் தனித்தமிழர் இவர்களின் உதவியையுங்கொண்டு நமது நாட்டின் முற்கால இருப்பை ஜனங்களுக்குச் சொல்லச் சொல்லித் தாங்களும் தற்கால இருப்பையும் அதன் சிகிச்சையையும் எடுத்துக்காட்டித் தாழ்ந்த ஜனங்களுக்கும் ஒரு கிளர்ச்சியை உண்டு பண்ணினாலல்லாமல் நாடு ஏற்றமடைய வழியில்லை. ஆனால், ஆங்கிலத்தமிழர் பலர் சில ஜில்லா கான்ப்ரன்ஸுகளில் எழுந்திருந்து தாழ்ந்த ஜனங்களைப்பார்த்து நாடு முன்னேற்றத்தை யடையவேண்டிய வழிகளைச்சொன்னார்களென்றாலும், அவர்கள் (ஆங்கிலத்தமிழர்கள்) அசுவதாட்டியாக இங்கிலீஷில் பேசி முடித்துப்போய்விட்டதனால், அதனைத் தாழ்ந்தஜனங்கள் ஏற்றுக்கொள்ளமுடியாதது ஆச்சரியமல்ல. அந்த ஆங்கிலத்தமிழரோ தமது இங்கிலீஷில் கொண்ட கவுரவத்துக்காகவாவது தமிழ்ப்பேச்சால் தமக்குச் சிறுமைவருமே என்ற எண்ணத்தினாலாவது இங்கிலீஷில் பேசினார்கள் என்று சொல்வதற்கு நியாயமில்லை. ஆனால், தமிழில் பேசிப்பழக்கமில்லாக் குறைவேதான். ஏனெனில்: அந்த ஆங்கிலத்தமிழரே பின்னும் சில இடங்களில் கூடியசபைகளில் தமிழில் சொன்னதைக் கேட்டு ஆனந்திக்கிறோமாதலால்.

இவர்கள் இப்படி தமிழில் பேசப்பழகாததற்குக்காரணம், அவர்களது ஸ்கூல் படிப்பேதான். என்னை? பள்ளிக்கூடங்களில் பெரும்பான்மையும் எல்லாப்பாடங்களும் எல்லாக்கேள்விகளும் ஆங்கிலத்திலேயே இருந்த குறைவாலேதான். இப்போது உண்டாயிருக்கும் நவீனக்கிளர்ச்சியின்படி உயர்தரப்படிப்பிலும் சாஸ்திரப் பயிற்சிகளெல்லாம் தமிழிலேயே படிப்பிக்கும்படியான காலம் நேர்ந்துவிட்டால், நமது தேசம் கூடியசீக்கிரத்தில் தேசமாகும். ஏனெனில், நமது மாணவர்க்குச் சகல சாஸ்திரங்களையும் தேசபாஷையிலேயே சொல்லத் திறமையுண்டாகி, ஏழைகளிடத்தில் கூட்டுறவு

முதிர்ந்து, கிராம ஸங்கங்களில் அந்த விஷயங்களைப் பிரஸங்கிக்க நேரும். அப்படி நேர்ந்தால், கிராமத்து ஜனங்கட்கும் நாகரிகமும் தற்கால இருப்பும் அதற்கு சிகிச்சை செய்யவேண்டிய வகையும் தெரிந்து தாமும் கலந்து நாட்டை விருத்திக்குக்கொண்டுவர முன் வரக்கூடும்.

ஆகையால் மித்திரநேயர்களே! நாம் ஆரியத்தமிழர் ஆங்கிலத் தனித்தமிழர் என்றவகையில் நில்லாமல், ஒருங்குகூடி ஜாதி முதலிய பேதம் பாராட்டாமல் கிராம ஸங்கங்கள் கூட்டித் தேசப் பொது நன்மைக்கு உழைப்பதையே முற்பட்டகாரியமாகக் கைக்கொண்டு முயலவேண்டும். எவ்வளவு வருஷம் காங்கிரஸ் கூடிக்கதறினாலும், உள்நாட்டுக்கூட்டங்கள் கூடி உள்நாட்டு ஜனங்கட்குத் தேச இருப்பைச்சொல்லி அவர்களை ஊக்கிவிட்டாலல்லாமல் பயன் உண்டாகப் போவதில்லை. உள்நாட்டு ஜனங்களோடுகூடி நாம் ஒருமித்து கதறினாலல்லாமல், நாம் நன்மை யடையமாட்டோம். இதுவே முதிர்ந்த தேசாபிமானிகளது முக்ய நோக்கம். ஆதலின், நம்மவர் வித்யாசமற்றுக்கூடி தாழ்ந்த ஜனங்களைப் படிப்பினால் உயர்த்த முன்செல்லவேண்டும். ஜாதி முதலிய பேதமின்றி ஒருமித்துக் காரியம் செய்யப்பெறும்போதுதான் கடவுளும் அருள்புரிவார். அதில்லாது கலகமுள்ளபோது கடவுள் விழித்துப்பாரார். இது நம்மெல்லோருடைய அனுபவமேதான். உண்மையான தேசாபிமானிகள் இதுவே உத்தமவழியென்று நாடுவார்கள். ஒவ்வொரு தேச சரித்திரமும் இதனையே நமக்குச் சொல்லிக்காட்டுகிறது. அப்படி நாம் ஒருமித்துக் கூடாதவரையில், தெலுங்கரும் மற்றவரும் கான்ப்ரன்ஸுகளில் நம்மை ஒதுக்கியேவைத்துப் பேசுவார்களென்பதில் தடையென்ன இருக்கிறது? நாம் ஒன்றுகூடி நம் சபைகளைப் பலப்படுத்திப் பொதுச்சபையை இராஜதானிப்பட்டணத்தில் கூட்டித் தீர்மானங்கள் செய்துவந்தால், மற்றவரும் நம்மை மனிதரென மதித்துத்தேசப் பொதுவிஷயங்களில் நம்மையும் யோசனை கேட்பார்கள். அதுவரையில் நாம் காட்டுவாசிகளேயாவோம்.

ஸ்நேஹலதையின் பிராணப் பரித்தியாகம்.

(ஹிந்து ரேவ்யூ)

ஸ்நேஹலதையென்னும் ஓர் வங்காளதேசத்திய பிராம்மணச் சிறுமி சிலமாதங்கட்குமுன் தன்னுடைய விவாகத்துக்காக வரதக்ஷிணைபெற வழியறியாது திகைத்திருந்த தன் பெற்றோர்கள் கடைசியாய் தாங்கள் குடியிருந்த வீட்டை விற்கவோ அடைமானப்படுத்தவோ முயல்வதைக்கண்டு சகியாது தன் பிராணனைப் போக்கிக் கொண்ட விஷயம் மித்திர நேயர்கள் அறிந்ததே.

அத்தேசத்து உயர்குலத்தவர் ஆசாரப்படி அப்பெண்ணுக்குக் கல்யாணம் முடித்துத்தீரவேண்டிய பருவம் சமீபித்திருக்கவேண்டும் என்றும் அப்பெற்றோர்கள் செல்வத்தை விசேஷமாகப் பெற்றிராத நடுத்தரத்தவரெனவும் அறியலாம். ஆயினும், அத்தாய்தந்தையருக்கு ஸ்நேஹலதை ஒரே குமாரியா? அல்லது அவளுடன்பிறந்த தமக்கைகள் எத்தனை பெயர்? அவர்களுக்குக் கல்யாணம் செய்வித்ததனால், அக்குடும்பத்துக்கு எவ்வளவு ஏழமையுண்டாயிற்று? ஸ்நேஹலதையைத்தவிர இனிக்கல்யாணம் செய்துவைக்கவேண்டிய தங்கைமார் எத்தனை பெயர்? மேலும் இக்குடும்ப ஸம்ரக்ஷணையிலுள்ள இதரர் யாவர்? முதலிய விவரங்கள் யாரும் சொல்லக்கேட்டதில்லை. இவ்விஷயங்களும் தெரிந்தால், மேற்சொல்லிய கொலையை வற்புறுத்திக்காட்டுகிற ஆசாரத்தை நன்றாய் ஆராய்வதற்கு அனுகூலமாயிருக்கும்.

ஆயினும் இதுசம்பந்தமாக இதுவரையில் பிரசுரம் செய்யப்பட்டிருப்பவைகளைக்கொண்டே ஒருவாறு ஆராய்வோம். இதுவிஷயமாய் பலர் பலவிடங்களில் சபைகூட்டியும் அவரவர்களுக்குத் தோற்றியபடி பேசியும் தங்கள் கோபத்தை வெளியிட்டிருக்கிறார்களே யொழிய, இதுவிஷயத்தில் கவனிக்கவேண்டியவைகளை சமசித்தத்

தோடு தீர விசாரித்து இந்த துராசாரத்திற்கு மூலக்கேடு எங்கிருக்கிறதென்று ஆராய்ந்தவரைக்காணேம். மேற்கண்ட கொலையின் விவரத்தை சுருக்கமாய்ச்சொல்லி பிறகு நம் அபிப்பிராயத்தைச் சொல்வோம்.

ஸ்நேஹலதையின் பெற்றோர்கள் அவளுக்கு மணாளனாக ஒரு சிறுவனைக் குறித்திருந்தார்கள். அவன் பி. ஏ. பரீக்ஷை கொடுத்து பி. எல். பரீக்ஷைக்காகப் படித்துக்கொண்டிருக்கப்பட்டவன் ஆனதால், பிறகு நல்ல ஸ்திதிக்கு வரக்கூடியவனாக மதிக்கப்பட்டிருந்தான். இப்பையனைச்சேர்ந்தவர்கள், வரதக்ஷிணையாக ரொக்கம் ரூ. 500-ம் நகையாக ரூபாய் 700-ம் கொடுக்கும்படி கேட்டார்கள். பெண்ணின் தகப்பனிடமோ பணமில்லையாதலால் தன் வீட்டைவிற்றுச்சம்பாதிக்கத் தீர்மானித்தான். இது சமாசாரம் பெண்ணுக்குத் தெரிந்ததும், தன்னாலல்லவா இப்படி கஷ்டம் பெற்றவர்களுக்கு நேரிடுகிறதென்று தன் பிராணனை விடத்தீர்மானித்துக்கொண்டு, தன்னுடைய வஸ்திரங்களை சீமைஎண்ணெயில் நனைத்துக்கொண்டு ஒரு அறைக்குட்சென்று தாளிட்டு நெருப்புவைத்துக்கொண்டாள். இது மிகப்பரிதாபமானதே. இவ்வாறே உண்மையிருக்குமாயின், ஒரு சார்பாகக் கவனித்தால், ஸ்நேஹலதை செய்தகாரியத்தை என்னென்று வியப்பது! பிறர் சுகத்தைநாடி தன் சுகத்தை வெறுத்துக்கொண்டது மகா காரியமன்றோ! இதை ஆத்மத்தியாகம் அல்லது தன்னை பலியாகக்கொடுத்து இயற்றிய யாகமென்றே சொல்லலாம். ஆனல் மற்றொரு ரீதியாகப்பார்த்தால் இக்காரியத்துக்கு அப்பெரும்பெயர் தகாது. கொலையென்பது சரியாயிருக்கும். ஆனல் இக்கொலைக்கு உத்தரவாதிகள் யார் என்பதுதான் தீர்மானிக்கவேண்டிய விஷயம்.

* * * * * * * *

எல்லாத்தேசங்களிலும் வெகு ஜனக்கூட்டங்கள் சேர்ந்து ஆலோசிக்குமிடத்து ஆழ்ந்த பகுத்தறிவு விசேஷமாயிராததுபோலவே, வங்காளத்திலும் கூடிய ஜனங்கள் இப்பழிக்கு, இத்தேசத்தில்

முக்கியமாய் உயர்வகுப்பிற் பிறந்தவர்கள் என்று சொல்லப்படுபவருள் வழங்கும் வரதக்ஷிணை வாங்குவதென்ற ஆசாரமே முக்கிய காரணமென்று தீர்மானித்துவிட்டார்கள். ஆம், பிள்ளைவீட்டுக்காரர்கள் வரதக்ஷிணை கேட்காதிருந்தால், ஸ்நேகலதையின் பெற்றோர்கள் தங்கள் வீட்டைவிற்க முயன்றிரார்கள். ஸ்நேகலதையும் தன் உயிரை மாய்த்துக்கொண்டிருக்கமாட்டாள் என்று ஒருவிதமாய் ஞாயம் சொல்லலாமாயினும், அப்பெற்றோர்கள் தங்கள் குமாரிக்கு உயர்தரப் பரீக்ஷைகள்கொடுத்து மேலான ஸ்திதிக்கு வரக்கூடியவர் என்று மதிக்கப்படும் ஒரு புருஷனைத்தேடாமல், தங்கள் அந்தஸ்துக்குத்தகுந்த புருஷன் போதுமென்று திருப்தியாயிருந்தால் இவ்வளவு தொகை கொடுக்கவேண்டியிராதென்பதும் உண்மையல்லவோ? அநேகமாக ஒவ்வொருவரும் மாப்பிள்ளை வீட்டுக்காரர்களுடைய கொடுமையைப்பற்றிக் கதறுகிறார்களேயொழிய, யாரும் பெண்வீட்டுக்காரருடைய பேராசையே இக்கொடுமைக்குக் காரணமென்றுரைப்போரைக்காணோம். பிள்ளைவீட்டுக்காரர் பேராசை, பெண்வீட்டுக்காரர் பெண்ணுக்குத் தங்கள் சக்திக்கேற்பட்ட செல்வமும் அந்தஸ்தும் தேடிவைக்கவேண்டுமென்று கொள்கிற ஆசையாலேயே வளர்க்கப்படுகிறது. இவ்வாறு பெண்வீட்டுக்காரருக்கு ஆசையில்லாதிருந்தால், பிள்ளைவீட்டுக்காரர் ஆசை யாதுபயன்படும்? தன்னாலே தொலையும் அல்லவா? ஆதலின் இக்கொலைக்கு உத்தரவாதிகள் யாரென்று பக்ஷபாதகமில்லாமல் விசாரித்தால், பிள்ளைவீட்டுக்காரரைக்காட்டிலும் பெண்வீட்டுக்காரர்களே பெரும் குற்றவாளிகளென்பது புலப்படும். இருதிறத்தாருடைய கக்ஷியையும் சற்று தீர விசாரிப்போம்.

ஒருவனுக்குக் கல்யாணம்பண்ணவேண்டிய கன்னிகை ஒன்றிருப்பதாக வைத்துக்கொள்வோம். பெண் சுமாரான ரூபவதி, கொஞ்சம் எழுதப்படிக்கத்தெரிந்தவள், அவள் பழைய குலாச்சாரப்படி நல்ல வம்சத்தினள் என்றே கொள்ளலாம். அவளைச்சரியானவிடத்தில் கல்யாணம் செய்விக்கவேணுமென்று அவளுடைய ஜனங்கள்

ஆசைப்படுவதும் ஸகஜமே. சரியானவிடம் என்பதற்கு மாப்பிள்ளைக்கு அப்பொழுதுள்ளதோ அல்லது பிறகு கிடைக்கக்கூடுமென்று அனுமானிக்கப்படுகிறதோவான செல்வப்பெருமையே அளவாக விருக்கிறது. முற்காலத்திலும் பெண்களுக்கு வரன் தேடும்பொழுது, தகுந்த ஆஸ்தியிருக்கவேணுமென்று கவனித்திருக்கிறார்கள். ஆனால் நம் தேசத்தில் குடும்பங்கள் பெரும்பான்மையாக அவிபக்த குடும்பங்களாகவிருந்தமைபற்றி, குடும்பத்தின் மொத்த ஆஸ்தியும், குடும்பத்திலுள்ள பாகஸ்தர்களின் தொகையும் கவனிக்கப்பட்டு வந்தன. சாகுபடிக்கு லாயக்கான சில ஏகரா நிலங்கள், கொஞ்சம் கால்நடைகள், பாரம்பர்யமான ஒரு வீடுவாசல் இவைகளோடு ஜாதிமுறைப்படி கொஞ்சம் அந்தஸ்துமிருந்துவிட்டால், அக்காலத்தில் அக்குடும்பத்துக்குக் கல்யாணக்கடையில் ஒரு கௌரவமுண்டு. முற்காலத்தில் சூத்திரர்கள் தவிர மேலான ஜாதிகளாகிய பிராம்மண க்ஷத்திரிய வைசியர்களிலும்கூட நடுத்தரக்குடும்பங்களில் ஒவ்வொரு புருஷனும் ஒவ்வொரு ஸ்திரீயும் செய்யவேண்டிய காரியங்களிருந்தன. ஸ்திரீகள் சமைப்பதுடன், அதைச்சேர்ந்த காரியங்களும், நெல்லுக்குத்துதல், ஆடுமாடுகளைப்பார்த்தல் முதலிய இதர வேலைகளையும், தங்களுடைய கௌரவக்குறைவின்றிச் செய்யத்தக்கவாறு செய்துவந்தார்கள். ஆனால் இக்காலத்திலோ இவையெல்லாம் மாறியிருக்கின்றன. புருஷர்கள், கவர்ன்மெண்டு உத்தியோகத்திலும் உயர்தரத்தொழில் என்ற வைத்தியம், லாயர் முதலியவைகளில் விசேஷமாகப் பிரவேசித்தும், ஜனங்கள் குடும்பங்களிலுள்ள இதர ஜனங்களுடைய தயவை அபேக்ஷியாமலும் அவர்களுக்கு உதவியாயிராமலும் தனியாய்ப் பிரிந்துபோகிற வழக்கம் ஏற்பட்டுவிட்டதால், பழைய குடும்ப ஒற்றுமை இப்பொழுது அநேகமாய்க் குலைந்துபோய்விட்டது. தற்காலத்தில் குடும்பங்களில் காலக்ஷேபம் நடப்பதோ மிகவும் துர்லபமாகத்தானிருந்துவருகின்றது. வரும்படியோ முன்னிலும் இப்பொழுது அதிகமென்பதற்கு ஐயமில்லை. செலவுக்குத்தக்கபடி அதிகப்பட்டிருக்கிறதோ அல்லவோவென்று சொல்லவும் முடியவில்லை. ஆயினும் முற்காலத்தில் ஒரு ரூபாய்க்கு வாங்

இன பொருள் இக்காலத்தில் அதிகம் கொடுத்துக் கொள்ளவேண்டியிருப்பதினாலே, பணத்துக்குப் பண்டம்கொள்கிற பலம் மிகவும் குறைந்துபோயினும், ஜனங்களுக்கு அதனால் கௌரவம் மிகவும் அதிகரித்துவிட்டது. நடுத்தர ஜனங்கள் அநேகர் தங்களது கிராமங்களை விட்டு பட்டணங்களையும், நகரங்களையும் அடைந்து, அங்குள்ள அபலாருடன் கலந்து பிழைக்க முயல்வதில், தங்கள் பழைய ஆதாரத்தையும் விட்டு புது ஸ்தலங்களில் புது ஜனங்களோடு போட்டிபோட்டுப் படும் கஷ்டம் இவ்வளவு அவ்வளவு அல்ல. இதனால் அவர்களுக்கு உயர்குணங்களும் குறைந்து தந்நயம் பாராட்டும் சுபாவமே மேம்பட்டுவிட்டது. ஸ்திரீகளுக்கோ, இக்காலத்தில் வேலையற்று சோம்பல் அதிகரித்துவிட்டது. இதுவே சுகவாழ்க்கையென்று அவர்களும் நினைக்கிறார்கள். சுமாரான குடும்பங்களில் இவர்களுக்கு சமையல் முதலிய வீட்டுவேலைகளும்கூட இல்லை. மாடுகன்று பார்ப்பதென்ற வெளிபலுவலுமில்லை. அத்தியாவசியமான வீட்டுச்சடங்குகளுக்கு சகாயமாயிருக்கும் தொழிலும்கூட நாளடைவில் குறைந்துகொண்டு வருகிறது. பொதுவாக ஒவ்வொருவருக்கும் தம் பெண்கள் தங்களது கிருஹத்தில் சுகமாயிருக்கவேண்டுமாதலால் அவர்களுக்குப் புருஷரைத்தேடும்போது பெற்றோர்கள் மேற்சொல்லிய விஷயங்களை கவனியாதிருக்கவும் மாட்டார்கள். அப்படியிருந்தாலும் அது தவறும் ஆகும்.

ஆனால், சுகம் என்பது இன்னதுதான் என்று தீர்மானிக்கிற விஷயத்தில், நவீனப்படிப்பாளிகள் நமது தேசத்தது அல்லாத புதியபுதிய அபிப்பிராயங்களைக் குடித்தன முறையிற் கலந்து, தங்களது மனத்தை நேரானவழியிற் செலுத்தாமல் வேறு வழியில் செலுத்திவருகிற கேடு தேசத்திற்கு ஏற்பட்டுவிட்டது. இந்தப் புதிய எண்ணங்களே வரதக்ஷிணை வாங்கும் துராசாரத்துக்கு முக்ய காரணங்கள் என்று கொள்ளவேண்டும்.

தொடரும்.

ஸ்ரீ கம்பராமாயணம்.

முகவுரை.

"நாடிய பொருள் கைகூடும் ஞானமும் புகழுமுண்டாம்
வீடியல் வழியதாக்கும் வேரியங்கமலை நோக்கும்
நீடிய அரக்கர் சேனை நீறுபட்டழிய வாகை
சூடிய சிலையிராமன் றோள்வலி கூறுவோர்க்கே"

ராமாயணம் என்பது ராம+அயநம்=ஸ்ரீ ராமபிரானுடைய சரித்திரத்தைச் சொல்லுவது என்றும், ராமா+அயநம்=இலக்குமியினுடைய சரித்திரத்தைச் சொல்லுவது என்றும் பெரியோர் இதற்குப் பொருள்கூறுவர். பூர்வாசிரியர்களும் சிறையிருந்தவளேற்றஞ் சொல்வது ராமாயணம் என்று கூறியருளினர்.

இதை வேதமென்றே சொல்லும் ஒரு மரபும் வழங்கிவருகிறது. என்னை? வேதம் ஏழு பிரிவினையுடையது. இதுவும் ஏழு காண்டங்களையுடையது. வேதம் 24 அக்ஷரங்களையுடைய காயத்ரி மஹா மந்திரத்தை யுள்ளடக்கியுள்ளது. இதுவும் காயத்ரி சங்கியைக்கு அநுகுணமாக ஓரக்ஷரத்துக்கு ஓராயிரமாக இருபத்துநான்காயிரம் சுலோகங்களையுடையதாக ஆதிகவியாகிய ஸ்ரீவான்மீகி பகவானால் செய்யப்பட்டுள்ளது. அந்த காயத்ரி மந்திரம் சூரியபகவானைப்புகழ்வதுபோல் சூரியமண்டல மத்யவர்த்தியான பரம்பொருளை ஏத்திப்புகழ்கிறது. இதுவும் சூரியவம்சத்து அரசர்களைச் சொல்வதுபோல் சூரியவம்சத்தில் அவதரித்துள்ள ஸ்ரீராமபிரானாகிய பரம்பொருளைப் புகழ்கிறது. வேதத்தில் இடையிடையே யாகாதிக்ரதுக்களைச் செய்யவேண்டிய முறையும் அவற்றின் பயன்களும் சொல்லப்பட்டிருக்கின்றன. இதிலும் யாகாதிக்ரதுக்களும் முறையும் செய்தாரும் பலனும் விவரமாகக் கூறப்பட்டிருக்கின்றன. வேதத்தில் உலக உயிர்களுக்கு நடைபெறவேண்டிய ஆசாரங்கள் வகுக்கப்பட்டிருக்கின்றன. இதிலும் தர்மங்கள் விகிதமாக எடுத்தாளப்பட்டிருக்கின்றன. எனவே, இக்காரணங்களாலும் இன்னும் பல ஏதுக்களாலும் இது வேதத்தின் அவதாரந்தான் என்று

நிரூபிக்கப்பட்டிருக்கின்றது. இதுபற்றியே, ஸ்ரீ வான்மீகத்தின் த்யான ச்லோகங்களில் "வேத வேத்யே" என்னும் ஒரு ச்லோகத்தில், "வேதத்தினால் ப்ரதிபாதிக்கப்படுகிற பரம புருஷனே தசரத குமாரனாகிய ஸ்ரீராமனாக அவதரித்தவுண்மையினால், அந்த வேதமும் ஸ்ரீ வான்மீகியினிடம் ஸ்ரீராமாயணமாக அவதரித்திருக்கின்றது" என்ற பொருள் கூறப்பட்டிருக்கின்றது.

உலகினர் பெறவேண்டிய நல்லொழுக்கங்களை, ஒரு உத்தம சரித்திரத்தில்வைத்து யாவரும் எளிதில் உணரும்படியும் அப்படியே நடக்கும்படியும் செய்யப்பட்டிருக்கிற உண்மையினாலும், மிக்க பலவானாயினும் உலகுக்கு விரோதமான தீயவொழுக்கங்களையுடையவனாகின் பலங்குன்றியழிவடைவான் என்னும் உண்மை வெளிப்போதலாலும், இந்த ராமசரித்திரத்தை விரும்பிக்கொள்ளாதவர் உலகத்தில் பெரும்பாலார் இல்லையென்பது கொள்ளப்படுகிறது. இதுபற்றியே இந்த ராமாயணம் பல பாஷைகளில் மொழிபெயர்க்கப்பட்டிருக்கின்றது.

ஸம்ஸ்க்ருதத்தில் வான்மீகம், போதாயனம், வாஸிஷ்டம், அத்யாத்மம், ஹநுமதீயம், பால ராமாயணம் முதலியன புராண வகைகளாகவும்; ப்ரஸன்னராகவம், அனர்க்கராகவம், உத்தர ராமசரித்திரம் முதலிய நாடக வகைகளாகவும் செய்யப்பட்டிருக்கின்றன.

தமிழில் கம்பராமாயணம், ராமாயணவெண்பா, அகவல் முதலியன செய்யுள் வகைகளாகவும், ஸ்ரீராமாயண ஓரடிக்கீர்த்தனை, ராமாயண ஓடம், ராமாயணக்கும்மி முதலிய சங்கீதகீர்த்தனரூபங்களாகவும் இயற்றப்பட்டிருக்கின்றன.

வடபாஷைகளாகிய குஜராத்தி, மராத்தி, ஹிந்தி, பங்காளி முதலிய பாஷைகளிலும் துளசிதாஸ் முதலிய பெரியோர்களால் சொல்லப்பட்டிருக்கின்றது.

இங்கிலீஷிலும் க்ரிவித் (Griffitt) என்னும் ஒரு ஐரோப்பிய மேதாவியாலும், தென்னிந்திய கவிஞர் என்னும் பட்டப்பெற்ற

ஸ்ரீமான் தோட்டக்காடு ராமக்ருஷ்ண பிள்ளையவர்களாலும், R. C. டட் என்னும் சரித்திரக்காரராலும் செய்யுள் ரூபமாகவும் செய்யப் பட்டிருக்கின்றது.

இதில் வர்ணதர்மங்களும், ஆச்ரம தர்மங்களும், யோகியோக தர்மங்களும், ஆசார்ய சிஷ்ய தர்மங்களும், ச்ரௌதஸ்மார்த்த தர்மங் களும், பிதா புத்ர தர்மங்களும், ஜேஷ்ட கனிஷ்ட தர்மங்களும், பர் த்தா பார்யா தர்மங்களும் (கணவன் மனைவியர்), ஆத்ம பரமாத்ம தர்மங்களும், ராஜராஷ்ட்ர தர்மங்களும், துஷ்டநிக்ரஹ சிஷ்டபரி பாலன தர்மங்களும், ஸாத்வீகராஜஸ தாமஸமாகிய குண தர்மங்க ளும், ஓரரசனிடத்திருந்து மற்றோரரசனிடத்துப் போகும் தூததர் மங்களும், நாயகனிடத்திருந்து நாயகியிடத்துக்குச்செல்லும் தூத ணுகிய சுந்தரன் தர்மமும், மந்திரி தர்மமும், ஆலோசனைச்சபை யாருடைய தர்மங்களும், வீர தர்மங்களும், ஒற்றருடைய தர்மமும் இன்னும் இவைபோன்ற தர்மங்களும் இவற்றிற்கு எதிரான அதர் மங்களும் தக்கவர்களைக்கொண்டு உதஹரித்துக் காட்டப்பட்டு அவ ரவர்கள் அடைந்துள்ள நன்மை தீமைப்பயன்களும் மிகுந்த விவர ணமாகப் படிப்பார் மனதில் பசுமரத்தாணிபாகப் பற்றும்படி விளக் கப்பட்டிருக்கிறது.

இன்னும், நாடு நகர வர்ணனைகளும், காடு மலை வர்ணனைக ளும், நதி நத வர்ணனைகளும், இயற்கை செயற்கை வர்ணனைகளும், பூகோள ககோள வர்ணனைகளும், உதயாஸ்தமன வர்ணனைகளும், வயல் வரப்பு வர்ணனைகளும் இன்னும் இவைபோன்ற வர்ணனைக ளும் கூறப்பட்டிருக்கின்றன.

மற்றும் சோதிட வைத்ய சாஸ்திரங்களும், இலக்கண இலக் கிய சாஸ்திரங்களும், பிராணிதத்வ தாவரதத்வ சாஸ்திரங்களும், கர்மஞான பக்தியோக சாஸ்திரங்களும், தேஹதத்வ ஆத்மதத்வ சாஸ்திரங்களும், கலாமுத்ரிகா சாஸ்திரமும் மனு சாஸ் திர தனு (வில்) சாஸ்திரங்களும், அச்வ சாஸ்திர கஜ சாஸ்திர ரத சாஸ்திரங்களும் இன்னும் இவைபோன்ற சாஸ்திரார்த்தங்களும் ஆங்காங்குக் குறிப்பாகக் காட்டப்பட்டிருக்கின்றன.

இப்படி லௌகிக வைதிகவுண்மைகளைச் செவ்வனே எடுத்துக் காட்டி, மனிதர் அடையவேண்டிய தர்ம அர்த்தகாம மோக்ஷமாகிய நான்குவித புருஷார்த்தங்களையும் ஸுலபமாக அடையவேண்டிய வழிகள் காட்டப்பட்டிருக்கின்றன.

மேற்கூறிய தர்மங்களும் சாஸ்திரங்களும் வர்ணனைகளும் இதே பத்திரிகையில் ஒவ்வோர் சமயத்தில் ஒவ்வொன்றாக எடுத்து விவரமாக ஆளப்படும்.

இப்படி இது உலகத்துக்குப் பொதுவான யுக தர்மங்களையும் ஒவ்வோர் யுகத்துக்கேயுரிய சில தர்மங்களையும் எடுத்துச் சொல்லி வரும் உத்தம சாஸ்திரமானமைபற்றி, இது வேதம்போல மிகவும் பழமையான நூலென்று சொல்லுகிறார்கள். இதற்குப்பின்வரும் உபநிஷத்துக்களில் கூறப்படுகிற பிரமாணங்களே போதுமான சாக்ஷிகளாகும்.

அவையாவன:—

ருக் வேதம் ஆறாவது அஷ்டகத்தில், "ஸ்ரீராமச்சந்திரர் சோபனருடையான சீதா பிராட்டியோடு பிதுர்வாக்ய பரிபாலனம் செய்வதற்காக வனஞ்சென்று, லோக கண்டகனாகிய ராக்ஷஸேச்வரன் இராவணனையும் அவனைச்சேர்ந்த துஷ்டர்களையும் ஸம்ஹரிப்பதற்காக எண்ணங்கொண்டு, தமது பத்நியை அவன் அபஹரித்ததையே காரணமாகப்பிடித்து, சேதுபந்தனம் செய்து, அதன்வழியாக இலங்கைசேர்ந்து, அவனை வதைத்து, அக்கினிப்பிரவேசம் செய்த சீதையை அக்கினிபகவான் துதிசெய்துகொடுக்க வாங்கிக்கொண்டு, அந்த சீதாதேவியோடும் மற்றுமுள்ள நண்பர்களோடும் புஷ்பகவிமானத்தில் ஏறி அயோத்தியா நகரம் சேர்ந்து பட்டாபிஷேகம் செய்துகொண்டருளினார்" என்றிருக்கிறது.

ஸ்ரீராமப்ரதத்வ நிர்ணயோபநிஷத்தில், "அயோத்யா என்னும் வைகுண்டத்தில் விளங்காநிற்கும் பரப்ரஹ்மம்தான் ஸ்ரீராமன். அவன் அதிதியாகிய கோஸலா தேவியினுடைய முககமலத்தில்

உதித்தவன். அவன் தேவர்களுடைய வேண்டுகோளுக்கிணங்கி லோக பயங்கரனாகிய ராவணனை ஸம்ஹரித்தான். பிறகு பரந்தாமனான ஸ்ரீராமனைத் தேவர்கள் ஸ்தோத்ரம் செய்தார்கள்' என்று சொன்ன சுவேதகேதுவைப்பார்த்து உத்தாலகர் இந்தச்சரித்திரத்தை விஸ்தாரமாகச் சொல்லுமென்று கேட்க, அவரும் சொல்லத் தொடங்கினார். 'ஸ்ரீ மகாவிஷ்ணுவினுடைய ஸாரங்கம் என்னும் வில்லினுடைய அம்சமான கோதண்டத்தைத் தரித்தவனும், சகல லோகங்களையும் பரிபாலிக்கச் சூர்யகுலத்தில் அவதரித்த காசிப ப்ரஹ்மாவினுடைய அம்சபூதரான தசரதச் சக்ரவர்த்தியினுடைய பட்டமஹிஷியாக அவதரித்த அதிதியின் அம்சபூதையான கோஸலாதேவியின் முகத்தாமரையினுண்டானவனுமான ஸ்ரீராமபிரான், லோக சத்ருக்களான ராவண கும்பகர்ணாதியரை ஸம்ஹரித்து, அந்த இலங்கையின் வடகோபுர ஸமீபத்தில் தேவர்களெல்லாம் தம்மைச்சூழ்ந்திருக்க வீற்றிருந்தருளினார். பூர்வம் ஆதிசேஷன் வாயு பகவான் இவர்களது பலாபலங்களை யறியவிரும்பின தேவர்களின் பிரார்த்தனைக்கிணங்கி, இருவரும் மஹாமேருவில் தமது பலத்தைக் காட்டியபோது, வாயுபகவானால் மேருகிரியின் மூன்று சிகரங்கள் பேர்க்கப்பட்டுக் கடலில் எறியப்பட்டது, அதுவே திரிகூடமென்று பெயரையுடைய இந்த லங்கை. இதன் வடகோபுர ஸமீபத்தில் ஸ்ரீராமபிரான் இருந்துகொண்டு, சீதாபிராட்டியின் கற்பின் பெருமையை உலகத்துக்குக்காட்ட விரும்பி அந்த லோகமாதாவை அக்கினியில் பிரவேசிக்கும்படிச்செய்ய, அக்கினிபகவான் அந்தத்தாயைக் கையில் ஏந்திக்கொண்டு, கற்புத்தீ தன்னைச்சுட்டுவிட்டதென்று சொல்லி ஸ்தோத்தரித்துவிட்டுச் சென்றான்..............." என்று சொல்லியிருக்கிறது.

சுக்லயஜுர் வேதம் எட்டாவது சதகத்துள்ள ஸ்ரீராம ப்ரஹ்மோப நிஷத்தில், "எந்த ப்ரஹ்மமானது சூரியகுலத்துதித்த ராஜ தம்பதிகளுக்கு வரம் கொடுத்தருளியபிரகாரம், கோஸலாதேவியின் முககமலத்தில் அயோநிஜமாக அவதரித்ததோ, சிவதனுசைத்

துரும்பைப்போல் மதித்து முறித்துச் சக்திபூதையான சீதாபிராட்டியை அங்கிகரித்ததோ, திமிழ்த்துவஜனை வதைசெய்ததோ. சரபங்க முனிவர்க்கு முக்தி கொடுத்ததோ, அத்திரி சுதீக்ஷணன் சுதர்சனன் அகத்தியன் இவர்களுக்கு மோக்ஷஹேதுவான தர்சனத்தைத் தந்தருளியதோ, வருண தேவனது ப்ரார்த்தனைக்கிணங்கி சேதுபந்தனம் செய்தருளியதோ மனோவாக்குக்கெட்டாத அந்த ப்ரஹ்மந்தான் ஸ்ரீராமனாக அவதரித்தது'' என்று சொல்லியிருக்கிறது.

முக்திகோப நிஷதத்தில் ''ஸ்ரீராமா! நீரே பரமாத்மாவாகவும் சத் சித் ஆநந்தமாகிய தேகத்தையுடையவராகவும் இருக்கின்றீர். நீரே அயோநிஜராகவும் மரணமில்லாதவராகவும் நாராயணராகவும் இருக்கின்றீர்'' என்று ஹநுமானால் ஸ்தோத்தரிக்கப்பட்டிருக்கிறது.

இப்படியான ஸ்ரீ ராமாயணம் ஸ்ரீவான்மீகி முனிவரால் ஸம்ஸ்க்ருதத்திலும் கம்பநாட்டாழ்வாரால் தமிழிலும் செய்யப்பட்டிருக்கிறதென்று முன்னமே சொன்னோம். இவ்விரண்டு இராமாயணங்களையும் ஒருபுடையாக ஆராய்ச்சிசெய்து வருவதென்றே இந்த வியாஸத்துக்கு ஸ்ரீ கம்பராமாயணம் என்னும் பெயர் கொடுத்தோம். வான்மீக கம்பர்களின் ஒற்றுமை வேற்றுமைகள் இந்தத் தலைப்பின் கீழ் ஒவ்வொரு மாதத்துக்கு ஒவ்வொரு விஷயமாக எடுத்தாளப்படும். இடையிடை ஸ்ரீ கம்பராமாயண அருஞ்செய்யுள் விருத்தியுரையும் பல தக்க பண்டிதர்களால் ஆளப்பட்டு வரும்.

M. V. கோவிந்தராஜய்யங்கார்.

பொட்டகிராப் படங்கள் கையிலெழுதுவதற்கு ஈடாகுமா?

V. R. லிங்கம் என்னும் சித்திரக்காரர்

இதனால் தெரியப்படுத்துவதென்னவென்றால்:—

எவ்வளவு மங்கிப்போன பொட்டகிராப் படமானாலும் சரி! எவ்வளவு சிறிய பொட்டகிராப்பானாலும் சரி! அதைப்பார்த்து சுத்தமாயும் ஆள் முன்னால் இருப்பதுபோல் பிரத்தியட்சமாயும் பெரியதாய் சாயங் கொடுத்தாவாது அல்லாமலாவது எழுதிக்கொடுக்க முடியும். ஒருபடத்தை எவ்வளவு மாற்றவேண்டுமானாலும் எழுதமுடியும். அதாவது யாராவது செத்துப்போய் செத்தபிணத்தை பொட்டகிராப் எடுத்திருந்தாலும் அதை உயிருள்ளபோது இருந்ததுபோல் பிரத்தியட்சமாய் எழுதமுடியும், எந்த பொட்டகிராப் யந்திரமும் இந்தவேலைசெய்ய முடியாதென்பது தெரிந்த விஷயமே.

பொதுச்சங்கங்கட்கும் சமாஜங்கட்கும் மஹான்களுடைய படம் குறைந்த சார்ஜில் எழுதிக்கொடுக்க முடியும். மங்கிப்போன பழய படங்களைப் புதியதுபோல் சீர்திருத்த முடியும். கறை பிடித்திருந்தாலாவது பூச்சியரித்திருந்தாலாவது அதைச் சீர்திருத்தி அழகு செய்து கொடுக்கப்படும்.

V. R. லிங்கம்.
ஆர்டிஸ்ட், நாமக்கல்.

இரவில் இருட்டை அகற்றி
சூரியப்ரகாசத்தைப்போல் வெ
ளிச்சத்தைத்தரும் எலக்டிரிக்
பாக்கட் விளக்குகளும், சுருட்டு
பீடி பத்தவைக்கும் விளக்குக
ளும் இன்னும் அநேகவித எல
க்டிரிக்சாமான்களும்கிடைக்கும்

விலை விபரம்.

நெ. 2	மெட்டல் பல்ப் போட்ட விளக்கு		2	8	0
,, 3	பூதக்கண்ணாடி மூடியுடன் ...	...	3	0	0
,, 5	ஷை	வெள்ளிக்கலர்	3	6	0
,, 8	பெரிய பூதக்கண்ணாடி ...	...	8	0	0
,, 11	எலக்ஷன் விளக்கு ...	...	5	0	0
,, 37	சுருட்டு பிடிக்கும் விளக்கு	...	1	0	0
,, 37A	ஷை	...	1	12	0
,, 39	கெடியாரத்தைப்போல்	...	4	0	0

எலக்டிரிக் கம்பெனி,

நாகப்பட்டணம்.

பல கண்காட்சிகளில்
மெடல்கள் பெற்ற அபூர்வ ஔஷதங்கள்.

பி. சுப்பராவ் ஆயுர்வேத,

ஔஷதசாலை,

ஸ்ரீ வேங்கடேசபெருமாள் கோவில் சன்னதி, தஞ்சாவூர்.

தயவு செய்து

இதை தங்கள் சிநேகிதர்களுக்கு வாசிக்கக் காண்பியுங்கள்.

பி. சுப்பராவின் அபூர்வ ஆயுர்வேத ஔஷதங்கள்.

தாதுபுஷ்டி மருந்து:—இதன் குணத்தை எழுதிமுடியாது. அநுபோகத்தால் தெரிந்துகொள்ளலாம். தாதுநஷ்டம், பலஹீனம், ஆண்குறி துவளல், பசியின்மை, கண், கால் எரிவு, தேகவாகுஷி, சீக்கிரத்தில் ஸ்கலிதம், சொப்பன ஸ்கலிதம், கை, கால், இடுப்பு முதலிய அவயவங்களில் சோர்வு, சோம்பல், மேகச்சூடு, பாண்டு, சோகை, மேகவெள்ளை, வெட்டை, நீர்ஒழிவு, மதுமேகம், சதையடைப்பு, இன்னும் பற்பல மூத்திர ரோகங்களைப் போக்கும். சரீர புஷ்டி, புருஷத்தன்மை, போகசக்தி, ஜீரணசக்தி, அபரிமிதமான தாதுவிருத்தியை யுண்டாக்கும். நீத்திருக்கும் இந்திரியத்தை கெட்டிப்படுத்தி போகசக்தியை அதிகரிக்கும். டப்பா 1-க்கு விலை ரூ. 2, வி. பி. சிலவு அணா 5 பிரத்தியேகம்.

2. அக்கினி மாந்தத்திற்கு மருந்து:—பசியின்மை, புளித்த ஏப்பம், நெஞ்செரிச்சல், மலச்சிக்கல், வயிற்றுவலி, வாய்நாற்றம், அஜீரணம் வயிற்றுப்பிசம், நித்திரையில்லாமை, பித்த உபத்திரவங்களை சொஸ்தப்படுத்தும். பசி தீபனமும், தேக ஆரோக்யமும் தரும். டப்பா 1-க்கு அணா 8. வி. பி. சிலவு ஒன்று அல்லது 2 டப்பாக்கள் வரையில் அணா 5 பிரத்தியேகம்.

3. பிரமேகநிவாரணி:—எந்தக்காரணத்தினால் உண்டாயிருக்கும் மேகவெள்ளை, வெட்டை, நீர்க்குற்றல், நீர்தாரை எரிவு, சீழ், ரத்தம்வடிதல் முதலிய வியாதிகளை ஆண் பெண் இருதரத்தார்களுக்கும் சொஸ்தப்படுத்தும். சீசா 1-க்கு விலை ரூ. 1, வி.பி. சிலவு ஒன்று முதல் 6 சீசாக்கள் வரையில் அனுப்ப அணா 5 பிரத்தியேகம்.

என்னுடைய ஔஷதசாலையின் ஹெட் ஆபீசை பாங்கிப்பேட்டையிலிருந்து தஞ்சாவூருக்கு ஸ்திரமாக மாற்றியாய்விட்டபடியால், இனி எல்லா ஆர்டர்களும், இப்பக்கத்தின் தலையில் அச்சிட்டிருக்கும் எனது ஹெட் ஆபீசாகிய தஞ்சாவூர் விலாசத்திற்கே எழுதக்கோருகிறேன். பாங்கிப்பேட்டைக்கு எழுதவேண்டாம்.

இனாம்! இனாம்!!

உற்சாகமான கதைப்புத்தகம்.

இச்சிறந்த புத்தகத்தில் விநோதமான இருபது இனிய கதைகள் அடக்கியிருக்கின்றன. ஒவ்வொரு கதையையும் படிக்கப் படிக்க ஆச்சரியத்தையும் மகிழ்ச்சியையும் கொடுக்கக்கூடியது. இப்புத்தகம் இனாமாகவும் தபாற்செலவில்லாமலும் அனுப்பப்படும். இன்றைக்கே உங்கள் விலாசத்தை யெழுதி அனுப்புங்கள்.

வைத்திய சாஸ்திரி

மணிசங்கர் கோவிந்தஜி,

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,

22-பிராட்வே அல்லது 96-மவுன்ரோட்,

மதராஸ்.

கொழும்பு.— 27, டாம் வீதி.

ஏஜண்டு:—

நெல்லையப்ப முதலியார்,

38-சின்னக்கடைத்தெரு,

திருச்சிறுப்பள்ளி.

தயவுசெய்து எங்கள் ஜர்னலின் பெயரை குறிப்பிட்டு எழுதக்கோருகிறேன்.